| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | மொரட்டுவை | சல்பிட்டி கோறளை (மொரட்டு முல்லை) பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | தெஹிவளை | கொழும்பு (பாமன்கடை தெற்கு) பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை | கொழும்பு (வட கோட்டை) பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை பிரதேசத்தின் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை | கொழும்பு (நுகேகொடை) பிரதேசத்தின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| கொழும்பு | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை | கொழும்பு (தென் கோட்டை) பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |

12-551

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/ தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, பெப்புருவரி 25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, சனவரி 07.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | இங்கிரிய | ரத்மல்கொடை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ரய்கம் கோரளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |

1-550

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

விண்ணப்பம் கோரலினை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2104 மற்றும் 2018.12.28 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகை பகுதி I : தொகுதி (IIஅ) இல் என்னால் பிரிசுரிக்கப்பட்ட களுத்துறை மாவட்டத்தில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் கீழ் குறிப்பிடப்படும் பிரிவில் மாத்திரம் விண்ணப்பம் கோரலினை இரத்துச் செய்கின்றேன்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, சனவரி 07.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் |
|---|---|---|
| களுத்துறை | பண்டாரகம | ரைய்கம் கோறளை பிரிவின் அட்டலுகம பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி |

1-548

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நடாத்தப்படுகின்ற மூன்று வருட கால சேவை முன் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியை பயிலுவதற்காக 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களின் க.பொ.த. (உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் இரண்டு பயிலுநர் தொகுதியினரை ஒரே தடவையில் அனுமதித்தல் – 2018

1.0 தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றில் மூன்று வருட கால சேவை முன் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியை தொடர்வதற்காக சேர்த்துக்கொள்வதற்கு தேவையான கல்வித் தகைமைகளையும், தகவுதிறன்களையுமுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த.(உ.த.) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்க உரித்துடையவராவர். (பௌத்த சமயம், கத்தோலிக்க சமயம்/ கிறிஸ்தவ சமய பாடநெறிகளுக்காக 4.5 மற்றும் 4.8 அத்தியாயங்கள் பொருத்தமாகும்).

1.2 அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் அல்லது அவ்வாறு இல்லாவிட்டால் உரிய இரண்டு ஆண்டுகளிலும் க.பொ.த. (உ.த.) பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

1.3 அனைத்து விண்ணப்பதாரர்களும் இணையவழி முறைமை **(Online System)** ஊடாகவும் அத்துடன் பதிவுத் தபாலிலும் வர்த்தமானி அறிவித்தலில் 10.0 இல் "விண்ணப்பித்தல்" பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக விண்ணப்பப்படிவம் ஒன்றை முன்வைத்தல் வேண்டும்.

1.4 2016 மற்றும் 2017 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும் உரியவாறு விண்ணப்பிக்கக்கூடிய விண்ணப்பதாரர்கள் இரண்டு விண்ணப்பங்களை அனுப்புவது தேவையற்றதுடன், ஒரே விண்ணப்பப்படிவத்தில் உரிய தகவல்களை சரியாக தனித்தனியே குறிப்பிடப்படல் வேண்டும்.

1.5 ஆலோசனைகளை முறையான விதத்தில் வாசிக்காமல் 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்காக இரண்டு விண்ணப்பங்களை அனுப்புவது அவ்விண்ணப்பங்கள் இரண்டும் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாக அமையும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

1.6 தாம் விண்ணப்பிக்கின்ற பாடநெறியின் கீழ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் மிகுந்த அவதானத்துடன் வாசித்து விளங்கிக்கொண்டு அதன் பிரகாரம் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் பொறுப்பு விண்ணப்பதாரர்களுக்கு உரியதாகும்.

1.7 வர்த்தமானி அறிவித்தலில் "விண்ணப்பப்படிவத்தை தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்" பகுதியில் 7.0 இல் 7.1, 7.2 மற்றும் 7.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிக்கும் சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை தொடர்பில் விசேட கவனத்தைச் செலுத்த வேண்டும்.

1.8 விண்ணப்பப்படிவம் 2019.02.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக இணையவழி முறைமை (**Online System**) ஊடாகவும் அத்துடன் பதிவுத்தபாலிலும் அனுப்பி வைத்தல் வேண்டும். (இதற்காக 10.0 அத்தியாயத்தின் அறிவுரைகளை பின்பற்ற வேண்டும்)

1.9 இணையவழி முறைமை **(Online System)** ஊடாக விண்ணப்பிக்கும் போது விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்தின் (2019.02.15) நள்ளிரவு 12.00 மணிவரை அதற்காக சந்தர்ப்பம் வழங்கப்படும்.

2.0 **தகவுத்திறன்**

சகல விண்ணப்பதாரர்களும்

2.1 இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

2.2 மேலான நடத்தையும், சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

2.3 வயது:

2.3.1 2018.01.01 அன்று 25 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

2.3.2 சகல சமய பாடநெறிகளுக்கும் விண்ணப்பிக்கின்ற வணக்கத்துக்குரியவர்கள்/ மதகுருமார்கள் 2018.01.01 அன்று 30 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

2.4. விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும்.

3.0 **அடிப்படைக் கல்வித்தகைமைகள்:-**

3.1 அனைத்து விண்ணப்பதாரர்களும் கல்வியியற் கல்லூரிக்கு அனுமதிப்பதற்கு விண்ணப்பிப்பதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 3.2 மற்றும் 3.3 இல் குறிப்பிடப்படும் அடிப்படைக் கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும். (3.3.2 உரியதாவது பௌத்த சமயப் பாடநெறிக்கு மட்டுமே ஆகும்)

3.2 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பிரதான மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3.3

3.3.1 அனைத்து விண்ணப்பதாரர்களும் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் மொழிமூல மொழி (சிங்கள மொழி/தமிழ் மொழி) உள்ளிட்டதாக முதலாவது அமர்வில் ஐந்து (05) பாடங்களில் மூன்று (03) திறமைச்சித்தியுடன் கூடியதாக சித்தியடைந்திருப்பது கட்டாயமானதோடு, இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் உள்ளிட்டதாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருப்பது கட்டாயமானதாகும்.

3.3.2 ஆரம்ப பிரிவெனா இறுதிப் பரீட்சையில் கணிதம், சிங்கள மொழி உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மூன்று (03) திறமைச்சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்

3.4 மேலே 3.2. மற்றும் 3.3 இல் குறிப்பிடப்பட்ட அடிப்படைக் கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர் களின் ஒவ்வொரு பாடநெறிக்கும் தேவையான விசேட க.பொ.த. (சா.த.) தகைமைகள் இரண்டு அமர்வுகளுக்குள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் மூன்றாவது அமர்வில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

3.5 ஒவ்வொரு பாடநெறி தொடர்பாக தேவையான விசேட தகைமைகள் அந்தந்த பாடநெறியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

**கவனத்திற் கொள்க:-**

இதன் போது க. பொ. த. (சா.த.) பரீட்சையில் 2008 புதிய பாடத்திட்டத்தின் கீழ் மற்றும் அதற்குமுன் நடைமுறைப்படுத்தப்பட்ட பழைய பாடத்திட்டத்தின்படி கீழ்க்குறிப்பிட்ட பாடங்கள் கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

2008 – க.பொ.த. (சா.த.) புதிய பாடத்திட்டத்தின் கீழ் கவனத்திற் கொள்ளப்படுகின்ற பாடங்கள்:-

1. மைய (பிரதான) பாடங்கள் :

(i) சமயம் (ii) சிங்கள மொழியும் இலக்கியமும்/தமிழ் மொழியும் இலக்கியமும் (iii) ஆங்கிலம் (iv) கணிதம் (v) வரலாறு (vi) விஞ்ஞானம்

2. தொகுதிப் பாடங்கள் :

(i) முதலாவது பாடத்தொகுதியில் யாதேனும் ஒரு பாடமும் (ii) இரண்டாவது பாடத்தொகுதியில் யாதேனும் ஒரு பாடமும் (iii) மூன்றாவது பாடத்தொகுதியில் யாதேனும் ஒரு பாடமும்

2008 க்கு முன் நடைமுறைப்படுத்தப்பட்ட க.பொ.த. (சா.த.) பழைய பாடத்திட்டத்தின் கீழ் கவனத்திற் கொள்ளப்படுகின்ற பாடங்கள்:-

(i) சமயம் (ii) சிங்கள மொழியும் இலக்கியமும்/தமிழ் மொழியும் இலக்கியமும் (iii) ஆங்கிலம் (iv) கணிதம் (v) விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (vi) சமூகக் கல்வியும் வரலாறும் (vii) அழகியல் பாடங்களில் ஏதேனுமொரு பாடம் (viii) தொழில்நுட்பப் பாடத்தில் யாதேனுமொரு பாடம் (இலக்கம் i -vi வரையிலான பாடங்கள் மைய (பிரதான) பாடங்களாக கருதப்படும்)

ஆரம்ப பிரிவெனா இறுதிப் பரீட்சையின் கீழ் கவனத்திற் கொள்ளப்படும் பாடங்கள்

**(i)** சிங்களம் **(ii)** பாலி **(iii)** சமஸ்கிருதம் **(iv)** ஆங்கிலம் **(v)** கணிதம் **(vi)** திரிபிடக தர்மம்

3.6 ஆங்கில மொழியில் நடாத்தப்படும் பாடநெறிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஆங்கில மொழித் தேர்ச்சியை பின்வருமாறு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.6.1 ஆங்கில மொழிப் பாடநெறி தவிர்ந்த ஆங்கில மொழி மூலம் நடைபெறும் ஏனைய பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழிப்பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

3.6.2 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் ஆகிய பாடநெறிகள் ஆங்கில மொழிமூலம் நடாத்தப்பட்டாலும், ஆங்கில மொழிமூலம் போல் ஏனைய மொழிமூலத்தில் க.பொ.த. (உ.த.) பயின்ற விண்ணப்பதாரர்களும் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

3.6.3 <u>அனைத்து கற்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகள் ஆங்கில மொழிமூலமாக நடைபெறுவதால் ஆங்கில மொழி மூலம் பாடநெறியை பயிலக்கூடிய விண்ணப்பதாரர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிப்பது உகந்ததாகும்.</u>

3.7 சித்திரம்/ நடனம் (கீழைத்தேயம்)/ நடனம் (பரதம்)/ சங்கீதம் (கீழைத்தேயம்)/ சங்கீதம் (கர்நாடகம்)/ நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பின்வருமாறு தரப்படுத்தப்பட்டு தெரிவு செய்யப்படுவர்.

விண்ணப்பதாரர்கள் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பெற்றுக்கொண்ட Z புள்ளி திறனுக்கு அமைவாக மாவட்ட அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு விண்ணப்பதாரர்கள் க.பொ.த. (உ.த) பரீட்சையில் உரிய அழகியற் பாடத்தில் பெற்ற தரத்தை மேலிருந்து கீழ் வரிசைப்படுத்தி அவர்களின் Z புள்ளியுடன் அதனை ஒப்பிட்டுத் தயாரிக்கப்பட்ட முன்னுரிமைத் தொடரொழுங்கிற்கு அமைவான தெரிவுகள் மேற்கொள்ளப்படும். அதற்கமைய மேலே குறிப்பிட்ட Z புள்ளியுடன் கூடிய உயர்ந்தளவிலான தரம் உரித்தாகும் அழகியல் பாடத்திற்குரிய விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3.8 **<u>தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கின்ற அனைத்து கல்வி மற்றும் ஏனைய சான்றிதழ்களினதும் செல்லுபடியாகும் திகதி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்தினம் (2019.02.15) அல்லது அதற்கு முன்னரான தினமொன்றாக இருத்தல் வேண்டும்.</u>**

4.0 **ஒவ்வொரு பாடநெறிக்கும் அவசியமான தகைமைகள்**

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நடைமுறையிலுள்ள ஒவ்வொரு பாடநெறிக்கும் ஆட்சேர்த்துக் கொள்வதற்குரிய கல்வித் தகைமைகளும் ஏனைய விசேட தகைமைகளும் கீழே காட்டப்பட்டுள்ளன.

**கவனத்திற் கொள்க:-**

- மேற்படி 3.0 இல் 3.2 மற்றும் 3.3 இல், கல்வியியற் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான க.பொ.த. (உ.த.) மற்றும் க.பொ.த. (சா.த.), அடிப்படை பிரிவெனா இறுதி போன்ற பரீட்சைகளில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய குறைந்தபட்ச அடிப்படைக் கல்வித் தகைமைகள் காட்டப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு பாடநெறி தொடர்பாகவும் விசேடமாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய பாடத் தேர்ச்சி அவ்வவ் பாடநெறிகளின் கீழ் காட்டப்பட்டுள்ளன.
- உடற்கல்வி பாடநெறியில் விண்ணப்பதாரர்களின் விளையாட்டு சான்றிதழ்களின் புள்ளிகளின் வரிசைப்படியும், ஆங்கிலம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடநெறி மற்றும் கோட்டா மதிப்பீடு காட்டப்பட்டுள்ள ஏனைய பாடநெறிகளிலும் அது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள வாசகங்களுக்கு ஏற்றவாறும், ஏனைய அனைத்து பாடநெறிகளுக்கும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள விடயத்திற்கு அமைய விண்ணப்பதாரர்களின் Z புள்ளி தொடரொழுங்கின்படி நேர்முகப்பரீட்சைக்கான அழைப்பு விடுக்கப்படும்.
- விண்ணப்பப்படிவத்தில் 9.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை மையமாகக் கொண்டு கணினி தரவுகளின் உதவியுடன் சில பாடநெறிகளுக்காக தேவைப்படும் க.பொ.த. (சா.த.) விசேட தகைமைகள் கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் தெரிவு செய்தலுக்கு உட்படுத்தப்பட்டு, குறிப்பிட்ட செயன்முறைகளுக்கு அமைவாக நேர்முகப்பரீட்சைக்காக அழைப்பு விடுக்கப்படுவர்.
- ஏதேனும் ஒரு பாடநெறிக்காக சேர்த்துக்கொள்ளப்படும் வெவ்வேறு தகைமைகள் தொடர்பாக கோட்டா மதிப்பீட்டு (விகிதம்) குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் (கத்தோலிக்கம்/ கிறிஸ்தவ சமயம் தவிர்ந்த) ஏதேனும் ஒரு மாவட்டத்திலிருந்து அப்பாடநெறிக்காக சேர்த்துக்கொள்ளப்படும் முழு எண்ணிக்கையில் உரிய கோட்டாவிற்குரிய மதிப்பீட்டைப்போல் மூன்று மடங்கான விண்ணப்பதாரர்கள் இருக்கும் வகையில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமை தொடரொழுங்கின்படி குறிப்பிட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை தெரிவு செய்யப்படும்.
- “தெரிவு செய்யப்படும் முன்னுரிமை தொடரொழுங்கின்படி” குறிப்பிடப்பட்டிருக்கும் பாடநெறிகளில் அந்த தொடரொழுங்கு கவனத்திற் கொள்ளப்படுவது நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும்போதல்லாது நேர்முகப்பரீட்சையைத் தொடர்ந்து தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் குறிப்பிட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தெரிவு செய்யப்படும்போதே ஆகும்.
- அதன் பிரகாரம், உடற்கல்வி பாடநெறியின் போது ஒவ்வொரு தொகுதியின் கீழ் விளையாட்டு புள்ளிகளின் அடிப்படையிலும், தெரிவு செய்யும் விசேட செயன்முறைகளுக்கு அமைவாக அவ்வப் பாடநெறியின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் அதன் பிரகாரமும், ஏனைய பாடநெறிகளின் போது தகைமையுடன் கூடிய விண்ணப்பதாரர்களின் **Z** புள்ளி தொடரொழுங்கு அடிப்படையில் சேர்த்துக்கொள்ளும் நடைமுறைக்கு அமைவாக தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| **4.1 பாடநெறி இலக்கம் 01** | **- ஆரம்பக்கல்வி (சிங்களம்)**<br>**ஆரம்பக்கல்வி (தமிழ்)** |

4.1.1 க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கலைப்பிரிவில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி பாடங்களுடன் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரர்கள்

4.1.1.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சைக்கு கலைப்பிரிவில் தோற்றி சிங்கள மொழி/ தமிழ் மொழி பாடத்துடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியிடைந்திருத்தல்,

மற்றும்

4.1.1.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் மொழிமூல மொழியில் (சிங்களம்/தமிழ்) மற்றும் கணிதம் போன்ற பாடங்களுக்காக குறைந்தபட்சம் திறமைச் சித்தி மற்றும் ஆங்கில மொழி பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.1.2 க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சிங்கள மொழி / தமிழ் மொழிப் பாடங்கள் இல்லாமல் ஏதேனும் ஒரு துறையில் கற்றலைத் தொடர்ந்த விண்ணப்பதாரர்கள்,

4.1.2.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கலை பாடத்துறை யில் தோற்றி சிங்களம்/ தமிழ் மொழி இல்லாமல் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

அல்லது

4.1.2.2 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் விஞ்ஞானம் (பௌதிக விஞ்ஞானம்/ உயிரியல்), வணிகம், ஏனைய, தொழில்நுட்பப் பாடத்துறைகளில் தோற்றி மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.1.2.3 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் மொழிமூல மொழியில் (சிங்களம்/ தமிழ்) பாடங்களில் குறைந்தபட்சம் அதிதிறமைச் சித்தியும், கணிதத்திற்கு திறமைச் சித்தியும் ஆங்கில மொழிப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்,

**கவனத்திற் கொள்க :-**

சேர்த்துக்கொள்ளப்படும் போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆரம்பக்கல்வி பாடத்துறைக்கு உள்வாங்கப்படும் மொத்த எண்ணிக்கையில்:-

(i) க.பொ.த. (உ.த.) பரீட்சைக்கு கலைப்பாடத்துறையில் தோற்றி சிங்கள மொழி/ தமிழ் மொழி ஒரு பாடமாக கற்ற விண்ணப்பதாரர்களில் 60% வீதமும்,

(ii) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ் மொழியை ஒரு பாடமாக கற்காத கலைப் பிரிவின் விண்ணப்பதாரர்களில் 10% வீதம் மற்றும் விஞ்ஞானம் (பௌதிக விஞ்ஞானம்/ உயிரியல்) பாடப்பிரிவிலும், வணிக பாடப்பிரிவிலும் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரர்களில் தலா 10% வீதம் என்ற வகையிலும்,

(iii) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் வேறு மற்றும் தொழில்நுட்ப பாடத்துறையில் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரர்களில் தலா 5% வீதமும்,

ஆக இருக்கும் விதத்தில் குறிப்பிட்ட விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப தெரிவு செய்யப்படும்.

(iv) குறிப்பிட்ட பாடத்துறையில் மாவட்ட / மாகாண / தேசிய என்ற சகல திறன்கள் வரிசை முறையில் அல்லது விண்ணப்பதாரர்கள் குறைவாக காணப்படும் சந்தர்ப்பங்களில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கலைப்பாடத்துறையை சிங்கள மொழி/ தமிழ் மொழி பாடம் இல்லாமல் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு மற்றும் வணிக பாடத்துறையை கற்ற விண்ணப்பதாரர்களுக்கு தொடரொழுங்கு முன்னுரிமை பெறும் விதத்தில் உரிய மாவட்டம்/மாகாணம்/ தேசிய திறமைக்கு அமைவாக எஞ்சியுள்ள வெற்றிடங்களுக்காக விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவர்.

| | |
|---|---|
| **4.2 பாடநெறி இலக்கம் 02** | **- விஞ்ஞானம் (சிங்களம்)**<br>**விஞ்ஞானம் (தமிழ்)**<br>**விஞ்ஞானம் (ஆங்கிலம்)** |

4.2.1 2016 ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பௌதிகவியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் போன்ற உயிரியல் பாடத்துறை சார்ந்த மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.2.2. 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம்/விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடங்களுக்கு குறைந்தபட்சம் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :-**

**விஞ்ஞானப் (ஆங்கில மொழி மூலம்) பாடத்துறை -**

இந்தப் பாடத்துறைக்காக மாவட்ட ரீதியில் சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையில் 60% வீதம் க.பொ.த. (உ.த.) ஆங்கில மொழி மூலமாக கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரர்களும் எஞ்சிய 40% வீதம் க.பொ.த. (உ.த) சிங்களம்/ தமிழ் மொழி மூலம் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரர்களும் உள்ளடங்கலாக தெரிவு செய்யப்படுவர். (சிங்களம்/ தமிழ் மொழி மூலம் க.பொ.த. (உ.த.) கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரர்களை சேர்த்துக் கொள்ளும் போது அவர்களுக்கிடையில் ஒரு பாடம் அல்லது ஆங்கில மொழி மூலம் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை உரித்தாகும்). இங்கு க.பொ.த. (உ.த.) ஆங்கில மொழி மூலமாக கற்றலை மேற்கொண்டு தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் போதிய எண்ணிக்கையைக் கொண்டிராத சந்தர்ப்பங்களில் சேர்த்துக்கொள்ளும் அடிப்படையின் கீழ் க.பொ.த. (உ.த.) சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலமாக கற்றலை மேற்கொண்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கிடையில் எஞ்சியுள்ள வெற்றிட எண்ணிக்கை பூர்த்தி செய்யப்படும்.

| | |
|---|---|
| **4.3 பாடநெறி இலக்கம் 03** | **- கணிதம் (சிங்களம்)**<br>**கணிதம் (தமிழ்)**<br>**கணிதம் (ஆங்கிலம்)** |

4.3.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் போன்ற பௌதிக விஞ்ஞானப் பாடத்துறையைச் சார்ந்த மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.3.2. 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் விஞ்ஞானம்/ விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும், கணிதம் போன்ற பாடங்களுக்கு குறைந்தபட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :-**

**கணிதப் (ஆங்கில மொழி மூலம்) பாடத்துறை :**

இந்தப் பாடத்துறைக்காக மாவட்ட ரீதியில் சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையில் 60% வீதம் க.பொ.த. (உ.த.) ஆங்கில மொழி மூலமாக கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரர்களும் எஞ்சிய

40% வீதம் க.பொ.த. (உ.த.) சிங்களம்/ தமிழ் மொழி மூலம் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரர்களும் உள்ளடங்கலாக தெரிவு செய்யப்படுவர். (சிங்களம்/ தமிழ் மொழி மூலம் க.பொ.த. (உ.த.) கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரர்களை சேர்த்துக்கொள்ளும் போது அவர்களுக்கிடையில் ஒரு பாடம் அல்லது ஆங்கில மொழி மூலம் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை உரித்தாகும்). இங்கு க.பொ.த. (உ.த.) ஆங்கில மொழி மூலமாக கற்றலை மேற்கொண்டு தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் போதிய எண்ணிக்கையைக் கொண்டிராத சந்தர்ப்பங்களில் சேர்த்துக் கொள்ளும் அடிப்படையின் கீழ் க.பொ.த. (உ.த.) சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலமாக கற்றலை மேற்கொண்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கிடையில் எஞ்சியுள்ள வெற்றிட எண்ணிக்கை பூர்த்தி செய்யப்படும்.

**4.4 பாடநெறி இலக்கம் 04 - சமூக விஞ்ஞானம் (சிங்களம்)**
**- சமூக விஞ்ஞானம் (தமிழ்)**

4.4.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆண்டில் க.பொ.த.(உ.த.) பரீட்சையில் வரலாறு, புவியியல், அரசியல் விஞ்ஞானம், பொருளியல் போன்ற பாடங்களில் குறைந்த பட்சம் ஒரு பாடத்திலோ அல்லது அதனுடன் கலைப் பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

அல்லது

4.4.2 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆண்டில் க.பொ.த.(உ.த.) பரீட்சையில் பொருளியல் பாடத்துடன் வணிகப் பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

அல்லது

4.4.3 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆண்டில் க.பொ.த.(உ.த.) பரீட்சையில் புவியியல் பாடத்துடன் வேறு பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.4.4 3.0 இல் 3.3.1 இற்குரிய உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சமூகக்கல்வி மற்றும் வரலாறு பாடத்திற்கு அல்லது வரலாறு/குடியுரிமைக் கல்வி/புவியியல் போன்ற பாடங்களில் ஒரு பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.4.5 ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த பாடத்துறைக்காக சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையில் 60% வீதம் 4.4.1 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களும், 30% வீதம் 4.4.2 இன்கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களும், 10% வீதம் 4.4.3 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களும், உள்ளடங்கும் வகையில் தகைமைகளின் தொடரொழுங்கு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். ஏதேனும் ஒரு பாடத்துறையின் கீழ் போதிய தகைமைபெற்றோர் எண்ணிக்கை இல்லாத சந்தர்ப்பங்களில் 4.4.1, 4.4.2, 4.4.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு தொடரொழுங்கு அடிப்படையில் முன்னுரிமை கிடைக்கும் விதத்தில் எஞ்சிய வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

**4.5. பாடநெறி இலக்கம் 05 - பௌத்த தர்மம்**

பௌத்த தர்ம பாடநெறிக்கு புத்த பிக்குகள், பெண் துறவிகள், புத்தசாசன அமைச்சின் கீழ் உள்ள பௌத்த அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட தசசில் மாதர்கள், மற்றும் துறவிசாரா விண்ணப்பதாரர்களும் விண்ணப்பிக்க முடியும்.

4.5.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த.(உ.த.) பரீட்சையில் பௌத்த தர்மம், பௌத்த நாகரீகம், பாலி, சமஸ்கிருதம் மற்றும் சிங்களம் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.5.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் பௌத்த தர்ம பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்/அடிப்படை பிரிவெனா இறுதி பரீட்சையின்போது 3.0 இல் 3.3.2 இன் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல்.

உள்ளடங்கலாக

4.5.3 பௌத்த தர்மாச்சாரிய பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்,

அல்லது

4.5.4 பிராச்சீன ஆரம்ப பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்,

அல்லது

4.5.5 அறநெறிப் பாடசாலை இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

4.5.6 மதகுருமார்களுக்காக/ துறவிகளுக்காக சாரிபுத்த தேசிய கல்வியியற் கல்லூரி (நிட்டம்புவை) ஒதுக்கப்பட்டுள்ளது. தகைமை பெற்ற பிக்குனிமார்கள்/தசசில் மாதர்கள் உள்ளார்கள் எனின் மதகுருமார்களுக்கு கீழ் சேர்க்கப்பட்டு, தம்பதெனிய சாரிபுத்த தேசிய கல்வியியற் கல்லூரிக்கு முன்னிலைப்படுத்தப்படுவார்கள். அங்கு நிலவும் வெற்றிடங்களுக்காக போதியளவு துறவி விண்ணப்பதாரர்கள் காணப்படாவிட்டால், அந்த எஞ்சியத் தொகையை துறவிசாரா விண்ணப்பதாரர்களைக் கொண்டு சாரிபுத்த கல்வியியற் கல்லூரியில் (தம்பதெனியா) சேர்த்துக் கொள்ளப்படுவர்.

4.5.7 மத குருமார்களுக்கான / துறவிகளுக்கான விண்ணப்பதாரர்களுக்கிடையில் 2016 ஆம் வருடத்தில் க.பொ.த. (உ.த.) சித்தியடைந்த துறவிசார் விண்ணப்பதாரர்கள் தேவையான எண்ணிக்கையில் இல்லாவிடில் 2015, 2014, 2013, 2012, போன்ற வருடங்களிலிருந்தும், மற்றும் 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) சித்தியடைந்த துறவிசார் விண்ணப்பதாரர்கள் தேவையான எண்ணிக்கை இல்லாவிடில், 2016, 2015, 2014, 2013 போன்ற வருடங்களிலிருந்தும், தொடரொழுங்கின்படி அண்மித்த ஆண்டை கருத்தில் கொண்டு க.பொ.த. (உ.த.) சித்தியடைந்த மதகுருமார்கள்/துறவிகள் போன்றோரிலிருந்து தேவையான எஞ்சிய விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவர்.

4.5.8 தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை

(அ) 4.5.1, 4.5.2 மற்றும் 4.5.3 சான்றிதழ்களைக் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(ஆ) 4.5.1, 4.5.2 மற்றும் 4.5.4 சான்றிதழ்களைக் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(இ) 4.5.1, 4.5.2 மற்றும் 4.5.5 சான்றிதழ்களைக் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(ஈ) 4.5.1 மற்றும் 4.5.2 சான்றிதழ்களைக் கொண்ட விண்ணப்பதாரர்கள்

**4.6 பாடநெறி இலக்கம் 06 - இந்து சமயம்**

4.6.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த.(உ.த.) பரீட்சையில் இந்து சமயம், இந்து நாகரீகம் மற்றும் சமஸ்கிருதம் போன்ற பாடங்களில் ஒரு பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.6.2 3.0 இல் 3.3.1 இற்குரிய உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இந்து சமய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்,

உள்ளடங்கலாக

4.6.3 சைவ சித்தாந்த பண்டிதர் சான்றிதழை பெற்றிருத்தல்,

அல்லது/ மற்றும்

4.6.4 சைவ புலவர் சான்றிதழை பெற்றிருத்தல்,

அல்லது/ மற்றும்

4.6.5 இளம் சைவ புலவர் சான்றிதழை பெற்றிருத்தல்.

4.6.6 தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை

(அ) 4.6.1, 4.6.2 மற்றும் ஏனைய அனைத்து சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(ஆ) 4.6.1, 4.6.2, 4.6.5 மற்றும் ஏனைய அனைத்து சான்றிதழ்கள் இரண்டில் ஒன்றை பெற்ற விண்ணப்பதாரர்கள்
(இ) 4.6.1, 4.6.2 மற்றும் ஏனைய அனைத்து சான்றிதழ்கள் மூன்றில் ஒன்றை பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(ஈ) 4.6.1, 4.6.2 சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரர்கள்

**4.7 பாடநெறி இலக்கம் 07 - இஸ்லாம்**

4.7.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் இஸ்லாம், இஸ்லாமிய நாகரீகம் மற்றும் அரபு போன்ற பாடங்களில் ஒன்றுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.7.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இஸ்லாம் சமய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்,

உள்ளடங்கலாக

4.7.3 அல் ஆலிம் பரீட்சை (ஆரம்ப பரீட்சையில் சகல பாடங்களிலும் மற்றும் இறுதி பரீட்சையில் சகல பாடங்களிலும் ஆகிய இரண்டிலும்) சித்தி பெற்றிருத்தல்,

அல்லது

4.7.4 அல் ஆலிம் ஆரம்ப பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.7.5 மௌலவி சான்றிதழ் பெற்றிருத்தல்.

4.7.6 தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை

(அ) 4.7.1, 4.7.2, 4.7.3 மற்றும் 4.7.5 சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(ஆ) 4.7.1, 4.7.2, 4.7.4 மற்றும் 4.7.5 சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(இ) 4.7.1, 4.7.2, மற்றும் 4.7.5 சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(ஈ) 4.7.1, மற்றும், 4.7.2 சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்

**4.8 பாடநெறி இலக்கம் 08 - கத்தோலிக்க சமயம்/கிறிஸ்தவ சமயம் (சிங்களம்)**
**கத்தோலிக்க சமயம்/கிறிஸ்தவ சமயம் (தமிழ்)**

4.8.1

4.8.1.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.8.1.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் கத்தோலிக்க சமயம்/கிறிஸ்தவ சமய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.8.1.3 விண்ணப்பதாரர்கள் கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்தவர் என்பதற்கான கத்தோலிக்க ஆயர் பதவிச் சான்றிதழ்/கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதற்கான கிறிஸ்தவ சபையின் சான்றிதழ் பெற்றிருத்தல்.

உள்ளடங்கலாக

4.8.2 கத்தோலிக்க சமய விண்ணப்பதாரர்களை தெரிவு செய்தல் பின்வரும் தகைமைகளின் தொடரொழுங்கு அடிப்படையில் முன்னுரிமை வழங்கி மேற்கொள்ளப்படும்.

4.8.2.1 தேசிய குருத்துவக் கல்லூரியில் இறையியல் தொடர்பான நான்கு வருட பாடநெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல்,

4.8.2.2 தேசிய குருத்துவக் கல்லூரியில் நடாத்தப்படும் தத்துவவியல் தொடர்பான பாடநெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல்,

4.8.2.3 இறையியல் கல்லூரியில் மூன்று வருட சமயக் கல்வி தொடர்பான பாடநெறிச் சான்றிதழ் பெற்றிருத்தல்,

4.8.2.4 துறவி/துறவிப்பெண் போல் ஆகுவதற்கான சமயக்கல்வி மற்றும் பயிற்சி பாடநெறியை (Novitiate) சிறந்த முறையில் கற்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதற்காக துறவற சபைத் தலைவரினால் அல்லது உரிய மாவட்ட ஆயரினால் வழங்கப்பட்ட சான்றிதழை பெற்றிருத்தல்,

4.8.2.5 தேசிய மறைக்கல்வி மையத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க மறை ஆசிரியர் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்,

அதாவது,

மறை ஆசிரியர் 03 (இறுதி)
அல்லது
மறை ஆசிரியர் 02 (மத்திய)
அல்லது
மறை ஆசிரியர் 01 (ஆரம்பம்)

4.8.2.6 க.பொ.த.(சா.த.) பரீட்சையில் கிறிஸ்தவ சமயம் / கிறிஸ்தவ நாகரீக பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.

4.8.3 கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரர்களை தெரிவு செய்தல் தொடரொழுங்கு அடிப்படையில் பின்வரும் தகைமைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்,

4.8.3.1 பிலிமத்தலாவை இலங்கை இறையியல் கல்லூரியினால் நடாத்தப்படும் இறையியல் டிப்ளோமாச் சான்றிதழை பெற்றிருத்தல்,

4.8.3.2 தேசிய கிறிஸ்தவ சபை ஊடாக நடாத்தப்படும் சமய அறிவு தொடர்பான தேசிய சான்றிதழ் (தர்மாச்சார்ய) பெற்றிருத்தல்.

4.8.3.3 க.பொ.த.(உ.த.) பரீட்சையில் கிறிஸ்தவ சமயம்/கிறிஸ்தவ நாகரீகம் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :-**

(i) சேர்த்துக்கொள்ளப்படும் முழு விண்ணப்பதாரர் எண்ணிக்கையில் 40% வீதம் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மத குருமார்களின் தகைமை வரிசையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும். 40% வீதமான மத குருமார் எண்ணிக்கையினர் முன்வராத பட்சத்தில் அந்த வெற்றிடங்களுக்கு துறவிசாரா விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(ii) சேர்த்துக்கொள்ளப்படும் முழு துறவிசாரா விண்ணப்பதாரர் எண்ணிக்கையில் 85% வீதம் 4.8.1. இன் கீழ் தகைமை பெறும் துறவிசாரா விண்ணப்பதாரர்களிடையில் 4.8.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தொடரொழுங்கு அடிப்படையை மையமாக வைத்து தெரிவு செய்யப்படும். 85% வீதம் பூர்த்தி செய்வதற்கு தகைமைகளைக் கொண்ட கத்தோலிக்க துறவிசாரா விண்ணப்பதாரர்கள் இல்லையெனில் அந்த வெற்றிட எண்ணிக்கை கிறிஸ்தவ துறவிசாரா விண்ணப்பதாரர்களைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும்.

(iii) சேர்த்துக்கொள்ளப்படும் முழு துறவிசாரா விண்ணப்பதாரர் எண்ணிக்கையில் 15% வீதம் 4.8.1 இன் கீழ் தகைமை பெறும் கிறிஸ்தவ துறவிசாரா விண்ணப்பதாரர்களிடையில் 4.8.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்யப்பட்டுள்ள தொடரொழுங்கு அடிப்படையை மையமாக வைத்து தெரிவு செய்யப்படும். 15% வீதம் வெற்றிடத்தை பூர்த்தி செய்வதற்கு தகைமைகளைக் கொண்ட கிறிஸ்தவ துறவிசாரா விண்ணப்பதாரர்கள் இல்லையெனில் அந்த வெற்றிட எண்ணிக்கையை கத்தோலிக்க துறவிசாரா விண்ணப்பதாரர்களைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும்.

(iv) கத்தோலிக்கம் மற்றும் கிறிஸ்தவ துறவிசாரா விண்ணப்பதாரர்கள் பொதுவாக அவர்களின் Z புள்ளியின்படி மாவட்ட அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, கிறிஸ்தவ துறவிசாரா விண்ணப்பதாரர் களில் 15% ஆனது சேர்த்துக்கொள்ளப்படும் மாவட்டம் என்ன என்பது நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றும் உயர் Z புள்ளியோடு கூடிய கிறிஸ்தவ விண்ணப்பதாரர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்ட அடிப்படையிலும் அவற்றில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

(v) 2016 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) ஐ தொடர்ந்த மதகுருமார்கள் சார்ந்த விண்ணப்பதாரர்களில் போதிய எண்ணிக்கை இல்லாவிடின் 2015, 2014, 2013, 2012 போன்ற ஆண்டுகளிலிருந்தும், 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) ஐ தொடர்ந்த மதகுருமார்கள் சார்ந்த விண்ணப்பதாரர்களில் போதிய எண்ணிக்கை இல்லாவிடின் 2016, 2015, 2014, 2013 போன்ற ஆண்டுகளிலிருந்தும் தொடரொழுங்கு அடிப்படையில் அண்மித்த வருடத்தை கருத்தில் கொண்டு மதகுரு/துறவிசார் விண்ணப்பதாரர்களின் தகைமைகளின் தொடரொழுங்கு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

**4.9 பாடநெறி இலக்கம் 09 - முதலாம் மொழி (சிங்களம்)**

4.9.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உ.த.) பரீட்சையில் சிங்கள மொழிப்பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.9.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்கள மொழியும் இலக்கியமும் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**4.10 பாடநெறி இலக்கம் 10 - முதலாம் மொழி (தமிழ்)**

4.10.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உ.த.) பரீட்சையில் தமிழ் மொழிப்பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.10.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**4.11 பாடநெறி இலக்கம் 11 - ஆங்கிலம்**

4.11.1

4.11.1.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உ.த.)பரீட்சையில் ஆங்கில மொழி (பாட எண் 73) உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.11.1.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச்சித்தியும்/ஆங்கில இலக்கியப் பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.11.2

4.11.2.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உ.த.) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.11.2.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில இலக்கியப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியும் மற்றும் ஆங்கில மொழிப் பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.11.3

4.11.3.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.11.3.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்த பட்சம் அதிதிறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :-**

ஒவ்வொரு மாவட்டத்திலும் 4.11.1 இன் கீழ் விண்ணப்பித்த சகல விண்ணப்பதாரர்களும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கையில் மூன்று மடங்கு பூர்த்தி செய்வதற்கு தேவையான எஞ்சிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 4.11.2 இன் கீழ் விண்ணப்பித்த தகுதியுடைய விண்ணப்பதாரர்களில் அவர்களின் Z புள்ளி தொடரொழுங்கு அடிப்படையில் அழைப்பு விடுக்கப்படும். குறிப்பிட்ட மூன்று மடங்கை பூர்த்தி செய்வதற்கு அந்த எண்ணிக்கையும் போதாதெனில் 4.11.3 இன் கீழ் விண்ணப்பித்த தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் அவர்களின் Z புள்ளி தொடரொழுங்கு அடிப்படையில் முன்னுரிமை கிடைக்கும் விதத்தில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

4.11.4 **தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை**

(i) குறித்த மாவட்டத்தின் 4.11.1 இன் கீழ் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் அவர்களின் Z புள்ளி முன்னுரிமை தொடரொழுங்கு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

(ii) மேலும் வெற்றிடங்கள் நிலவுமானால், 4.11.2 இல் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் அவர்கள் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில இலக்கிய பாடத்தில் பெற்ற தரத்தை மேலிருந்து கீழாக வரிசைப்படுத்தி மற்றும் அதனுடன் Z புள்ளியையும் ஒப்பிட்டு தெரிவு செய்யப்படும்.

(iii) மேற்படி இலக்கம் ii இன் கீழ் தெரிவு செய்த பின்பு மேலும் வெற்றிடங்கள் நிலவுமெனில் 4.11.3. இல் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள், அவர்கள் க..பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்திற்கு பெற்றுக்கொண்ட தரத்தை மேலிருந்து கீழாக வரிசைப்படுத்தி மற்றும் அதனுடன் Z புள்ளியையும் ஒப்பிட்டு தெரிவு செய்யப்படும்.

**4.13 பாடநெறி இலக்கம் 13 - சித்திரம் (சிங்களம்)**
**சித்திரம் (தமிழ்)**

4.13.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உ.த.) பரீட்சையில் சித்திரப் பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.13.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்திரப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.13.3 4.13.1 மற்றும் 4.13.2 தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கிடையில் 3.7 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும்.

**கவனத்திற் கொள்க:-**

(ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி தொடர்பாக உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் போதியளவு இல்லையெனில் அந்த வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்குரிய 2016 ஆம் ஆண்டில்/ 2017 க.பொ.த (உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்குரிய 2017 ஆம் ஆண்டில், நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சித்திரக்கலை பாடம் உள்ளடங்கலாக (03) பாடங்களில் சித்தியடைந்த பெருந்தோட்ட மாவட்டங்களில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்கள் அல்லாத இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழ் மொழிமூல விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை உரித்தாகும்.)

**4.14 பாடநெறி இலக்கம் 14 - நடனம் (கீழைத்தேயம்)**

4.14.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உ.த.) பரீட்சையில் நடனம் (கீழைத்தேயம்) பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.14.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் நடனம் (கீழைத்தேயம்) பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.14.3 4.14.1 மற்றும் 4.14.2 தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில் 3.7 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் இடம்பெறும்.

**4.15 பாடநெறி இலக்கம் 15 - நடனம் (பரதம்)**

4.15.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உ.த.) பரீட்சையில் நடனம் (பரதம்) பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.15.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் நடனம் (பரதம்) பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.15.3 4.15.1 மற்றும் 4.15.2 தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில் 3.7 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் இடம்பெறும்.

**கவனத்திற் கொள்க :-**

(ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி தொடர்பாக உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் போதியளவு இல்லையெனில் அந்த வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்குரிய 2016 ஆம் ஆண்டில்/ 2017 க.பொ.த. (உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்குரிய 2017 ஆம் ஆண்டில், நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் நடனம் (பரதம்) பாடம் உள்ளடங்கலாக (03) பாடங்களில் சித்தியடைந்த பெருந்தோட்ட மாவட்டங்களில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்கள் அல்லாத இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழ் மொழிமூல விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை உரித்தாகும்.)

**4.16 பாடநெறி இலக்கம் 16 - சங்கீதம் (கீழைத்தேயம்)**

4.16.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உ.த.) பரீட்சையில் சங்கீதம் (கீழைத்தேயம்) பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.16.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சங்கீதம் (கீழைத்தேயம்) பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.16.3 4.16.1 மற்றும் 4.16.2 தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில் 3.7 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் இடம்பெறும்.

**4.17 பாடநெறி இலக்கம் 17 - சங்கீதம் (கர்நாடகம்)**

4.17.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உ.த.) பரீட்சையில் சங்கீதம் (கர்நாடகம்) பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.17.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சங்கீதம் (கர்நாடகம்) பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.17.3 4.17.1 மற்றும் 4.17.2 தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில் 3.7 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் இடம்பெறும்.

**கவனத்திற் கொள்க:-**

(ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி தொடர்பாக உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் போதியளவு இல்லையெனில் அந்த வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்குரிய 2016 ஆம் ஆண்டில்/2017 க.பொ.த (உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்குரிய 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சங்கீதம்

(கர்நாடகம்) பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்த பெருந்தோட்ட மாவட்டங்களில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்கள் அல்லாத இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழ் மொழிமூல விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை உரித்தாகும்.)

**4.18 பாடநெறி இலக்கம் 18 - மேற்கத்தேய சங்கீதம் (ஆங்கிலம்)**

4.18.1

4.18.1.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீதப் பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.18.1.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் மேற்கத்தேய சங்கீதப் பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.18.2

4.18.2.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.18.2.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச்சித்தி/ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் மேற்கத்தேய சங்கீதப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.18.2.3 கல்வியியற் கல்லூரி நிறுவக சபை/ கல்விச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மேற்கத்தேய சங்கீதம் தொடர்பான நான்காம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல். (அறிமுறை மற்றும் செயன்முறை.)

அல்லது

4.18.3

4.18.3.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.18.3.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் மேற்கத்தேய சங்கீதப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.18.3.3 க.பொ.த. (உ.த.) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீதப் பாடத்தை மேலதிக பாடமாக சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.18.4

4.18.4.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.18.4.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீதப் பாடத்தில் விசேட சித்தியும், ஆங்கில மொழி பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :-**

(i) மேற்கத்தேய சங்கீதப் பாடநெறிக்காக நடாத்தப்பட்ட பிரயோகப் பரீட்சையில் திருப்திகரமான திறமை மட்டத்திற்கு அண்மித்திருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்களை தெரிவு செய்யும் போது மேலே 4.18.1, 4.18.2, 4.18.3, 4.18.4 வரிசைக்கிரமப்படி முன்னிலைப்படுத்தப்படுவர்.

**4.19 பாடநெறி இலக்கம் 19 - நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)**
**நாடகமும் அரங்கியலும் (தமிழ்)**

4.19.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த(உ.த.) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.19.2 3.0 இல் 3.3.1. இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

4.19.3 4.19.1 மற்றும் 4.19.2 இல் குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர் களுள் 3.7 ஆம் பந்தியில் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**4.20 பாடநெறி இலக்கம் 20 - உடற்கல்வி (சிங்களம்)**
**உடற்கல்வி (தமிழ்)**

4.20.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.20.2 3.0 இல் 3.3.1. இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் விஞ்ஞானம்/ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்,

மற்றும்

4.20.3 அங்கீகரிக்கப்பட்ட தடகள மெய்வல்லுனர் விளையாட்டுக்கள், ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டுக்கள் சம்பந்தமான அடைவுகள்/திறமைகள் பெற்றிருத்தல். (இதன் கீழ் வேறுபட்ட விளையாட்டு/ நிகழ்ச்சிகள் மூன்றுக்கு சமர்ப்பிக்கின்ற சான்றிதழ்கள் கவனத்திற்கொள்ளப்பட்டு 4.20.3.1 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய ஆகக்கூடுதலாக 75 புள்ளிகள் வழங்கப்படும்.)

4.20.3.1 விளையாட்டு/ நிகழ்ச்சிகளுக்காக புள்ளிகள் வழங்கப்படுவதற்குரிய முன்னுரிமைத் தொடரொழுங்கு கீழே காட்டப்பட்டுள்ளதுடன் அதற்காக உரிய அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக்களின் பெயர்ப்பட்டியல் 4.20.5 –X அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

விளையாட்டு / நிகழ்ச்சி முன்னுரிமை தொடரொழுங்கு

| தொடர் இல. | மட்டம் | தனி | குழு | இடம்/ தரம் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 01 | சர்வதேச மட்டம் | தனி | - | 1 | 25 |
| 02 | சர்வதேச மட்டம் | தனி | - | 2 | 24 |
| 03 | சர்வதேச மட்டம் | தனி | - | 3 | 23 |
| 04 | சர்வதேச மட்டம் | - | குழு | 1 | 24 |
| 05 | சர்வதேச மட்டம் | - | குழு | 2 | 23 |
| 06 | சர்வதேச மட்டம் | - | குழு | 3 | 22 |
| 07 | சர்வதேச பிரதிநிதித்துவம் | தனி | குழு | - | 21 |
| 08 | தேசிய மட்டம் | தனி | - | 1 | 20 |
| 09 | தேசிய மட்டம் | தனி | - | 2 | 19 |
| 10 | தேசிய மட்டம் | தனி | - | 3 | 18 |
| 11 | தேசிய மட்டம் | - | குழு | 1 | 19 |
| 12 | தேசிய மட்டம் | - | குழு | 2 | 18 |
| 13 | தேசிய மட்டம் | - | குழு | 3 | 17 |
| 14 | மாகாண மட்டம்/தேசிய கழகங்கள்/பாடசாலைக் கழகங்கள் | தனி | - | 1 | 16 |
| 15 | மாகாண மட்டம்/தேசிய கழகங்கள்/பாடசாலைக் கழகங்கள் | தனி | - | 2 | 15 |
| 16 | மாகாண மட்டம்/தேசிய கழகங்கள்/பாடசாலைக் கழகங்கள் | தனி | - | 3 | 14 |
| 17 | மாகாண மட்டம்/தேசிய கழகங்கள்/பாடசாலைக் கழகங்கள் | - | குழு | 1 | 15 |
| 18 | மாகாண மட்டம்/தேசிய கழகங்கள்/பாடசாலைக் கழகங்கள் | - | குழு | 2 | 14 |
| 19 | மாகாண மட்டம்/தேசிய கழகங்கள்/பாடசாலைக் கழகங்கள் | - | குழு | 3 | 13 |
| 20 | றெஜிமென்ட் சார்ஜன்ட் மேஜர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் 1 (இராணுவம்/ பொலிஸ்) /சாதாரண உத்தியோகத்தர் (கடற்படை)/ பிரதான அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் (வான்படை)/ஹர்மன் லோஸ் கிண்ண வெற்றியாளர்/ சொயிசா கிண்ண வெற்றியாளர்/மாணவர் படையணி கீழைத்தேயம்/ மேலைத்தேய பான்ட் வாத்தியம் (ஆண்/பெண்) வெற்றியாளர் | - | - | - | 10 |
| 21 | சனாதிபதி சாரணியமும்/பெண் சாரணியமும் | - | - | - | 10 |
| 22 | சாஜன்ட் மேஜர்/அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் II (இராணுவம்/ பொலிஸ்)/நிர்வாக சாதாரண உத்தியோகத்தர் (கடற்படை)/ அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் (வான்படை)/ஹர்மன் லோஸ் கிண்ண இரண்டாவது வெற்றியாளர்/ சொயிசா கிண்ண இரண்டாவது வெற்றியாளர்/மாணவர் படையணி கீழைத்தேயம்/ மேலைத்தேய பான்ட் வாத்தியம் (ஆண்/ பெண்) இரண்டாவது நிலை வெற்றியாளர் | - | - | - | 09 |
| 23 | கல்வி வலயம்/மாவட்ட மட்டம் | தனி | - | 1 | 10 |
| 24 | கல்வி வலயம்/மாவட்ட மட்டம் | தனி | - | 2 | 09 |
| 25 | கல்வி வலயம்/மாவட்ட மட்டம் | தனி | - | 3 | 08 |
| 26 | கல்வி வலயம்/மாவட்ட மட்டம் | - | குழு | 1 | 09 |
| 27 | கல்வி வலயம்/மாவட்ட மட்டம் | - | குழு | 2 | 08 |
| 28 | கல்வி வலயம்/ மாவட்ட மட்டம்/ பதவியணி சாஜன்ட் (Staff Sergeant) (இராணுவம்/பொலிஸ்)/பிரதம சாதாரண உத்தியோகத்தர் (கடற்படை)/ அதிகாரம் அளிக்கப்பட்ட சாஜன்ட் (வான்படை)/ ஹர்மன் லோஸ் கிண்ண மூன்றாவது நிலை/சொயிசா கிண்ண மூன்றாவது நிலை | - | குழு | 3 | 07 |
| 29 | கல்விக் கோட்டம்/பிரதேச செயலாளர் பிரிவு மட்டம் | தனி | - | 1 | 06 |
| 30 | கல்விக் கோட்டம்/பிரதேச செயலாளர் பிரிவு மட்டம் | தனி | - | 2 | 05 |
| 31 | கல்விக் கோட்டம்/பிரதேச செயலாளர் பிரிவு மட்டம் | தனி | - | 3 | 04 |
| 32 | கல்விக் கோட்டம்/பிரதேச செயலாளர் பிரிவு மட்டம் | - | குழு | 1 | 05 |
| 33 | கல்விக் கோட்டம்/ பிரதேச செயலாளர் பிரிவு மட்டம்/ பிரிவுப்படை வெற்றியாளர் (ஆண் படையணி – 29/பெண்-09) | - | குழு | 2 | 04 |
| 34 | கல்விக் கோட்டம்/பிரதேச செயலாளர் பிரிவு மட்டம் | - | குழு | 3 | 03 |

4.20.4 க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்கு விண்ணப்பதாரர் தோற்றியிருப்பின் அதற்குப் பெற்றுக்கொண்டுள்ள சித்திக்கு அமைய கீழே காட்டப்பட்டுள்ள வகையில் மேலதிக புள்ளிகள் உரித்தாவதோடு அவை விளையாட்டுச் சான்றிதழ்களுக்குரிய புள்ளிகளுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டு மொத்தப் புள்ளிகள் தயாரிக்கப்படும்.

**A** சித்தி - 05
**B** சித்தி - 03
**C** சித்தி - 02
**S** சித்தி - 01

4.20.5 கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விசேடமாக கவனத்திற்கொள்ளவும்.

(i) உடற்கல்வி பாடநெறிக்கு தெரிவு செய்யும்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் விண்ணப்பதாரர்களினது முழுமையான விளையாட்டு திறமைகளின் புள்ளி வரிசைக்கிரமப்படி கீழே காட்டப்பட்டுள்ள முறைமைக்கேற்ப தேர்ந்தெடுக்கப்படுவர். (4.20.3.1 அட்டவணை மற்றும் 4.20.4 அதற்காக உரியதாகும்.)

(ii) இணைத்துக்கொள்ளும்போது மாவட்ட அடிப்படையிலும் தடகள விளையாட்டுப் போட்டிக்கான குழு இலக்கம் 01 இன் கீழ் 30 % உம், கரப்பந்து, வலைப்பந்து மற்றும் காற்பந்து போன்ற விளையாட்டுக்களின் குழு இலக்கம் 02 இன் கீழ் 30% உம் மற்றும் 4.20.5 –X இன் கீழ்க் குறிப்பிட்ட அட்டவணையில்

காட்டப்பட்டுள்ளவாறு பிறிதும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக்களின் குழு இலக்கம் 03 இன் கீழ் 40% உம் ஆகுமாறு விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(iii) விண்ணப்பதாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கும் நியதிகளுக்கு அமைய புள்ளிகள் வழங்கப்பட்டு, ஒவ்வொரு குழுவின் கீழ் வெவ்வேறாக பெற்றுக் கொண்ட புள்ளிகளுக்கிடையே உயரிய (highest) புள்ளி மட்டத்துக்குரிய குழுவின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களுக்கு உரித்தாகும் குழு இலக்கம் தீர்மானிக்கப்படும். யாதேனும் விண்ணப்பதாரர் ஒருவர் குழு இலக்கம் 02 அல்லது குழு இலக்கம் 03 இன் கீழ் உயரிய மொத்தப் புள்ளிகளைப் பெற்றிருப்பின் உயரிய வெற்றி பெற்ற சான்றிதழுக்கு உரித்தான குழுவின் கீழ் அவர் கருத்திற் கொள்ளப்படுவார்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி (சர்வதேச மட்டம்) – கல்வியமைச்சு/ விளையாட்டு அமைச்சு மற்றும் அவற்றில் பதிவு செய்யப்பட்ட தேசிய விளையாட்டுக் கழகங்களுக்கு ஊடாக (சதுரங்கம், கரம், டாம் தவிர) இலங்கை தேசிய விளையாட்டுக் குழுவினை அல்லது பாடசாலை தேசிய விளையாட்டுக் குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பங்கேற்கும் சர்வதேச மட்டத்திலான போட்டிகள் இதற்காக செல்லுபடியாகும். (பாடசாலை விளையாட்டுக் குழுவில் தனிப்பட்ட ரீதியில் பங்குபற்றிய சர்வதேசப் போட்டிகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது). <u>மேலும் சர்வதேச போட்டிச் சான்றிதழ்கள் கருத்திற் கொள்ளப்படுவது குறைந்த பட்சம் உரிய விளையாட்டுக்காக மாகாண மட்டத்தில் அல்லது தேசிய மட்டத்தில் விளையாட்டுக்கான வெற்றியொன்றினைப் பெற்றிருந்தால் மாத்திரமேயாகும். அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.</u>

(v) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி (தேசிய) - கல்வி அமைச்சு/ விளையாட்டு அமைச்சு/ தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளும்,

மாகாணக் கல்வி திணைக்களம்/மாகாண விளையாட்டு அமைச்சு/தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மாகாண மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளும்,

மாகாண விளையாட்டு அமைச்சு/தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மாவட்ட மட்டத்திலான/ பிரதேச செயலாளர் பிரிவிலான விளையாட்டுப் போட்டிகள்/மாகாண கல்வி திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கல்வி வலயம் மற்றும் கல்விக் கோட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளும்,

இதற்காக செல்லுபடியாகும்.

(vi) விளையாட்டு அமைச்சில் மற்றும் கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்ட ‘A’ தரத்திலான போட்டிகளில் 1ம், 2ம் மற்றும் 3ம் இடங்களைப் பெற்றவர்களுக்கு மாத்திரம் அப் போட்டிகளில் அவ்வொழுங்கில் முன்னுரிமை வழங்கப்படும்.

(vii) 2016 க.பொ.த.(உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களைப் பெற்றுக் கொள்வதற்காக 2012.01.01 ஆந் திகதியில் இருந்து 2016.12.31 ஆந் திகதி வரை பெற்றுக்கொண்ட விளையாட்டுக்களின் வெற்றிச் சான்றிதழ்களும்/ 2017 க.பொ.த.(உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2013.01.01 ஆந் திகதியில் இருந்து 2017.12.31 ஆந் திகதி வரை பெற்றுக்கொண்ட விளையாட்டுக்களின் வெற்றிச் சான்றிதழ்களும் இதற்காக செல்லுபடியானதாகும். (கவனத்திற் கொள்ள வேண்டியவை: இக் காலப்பகுதிக்கு முன்னர் மற்றும் பின்னர் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் புள்ளிகள் வழங்குவதற்காக கவனத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் முன்வைக்கப்படும் அனைத்து சான்றிதழ்களும் அதற்குரிய நிறுவனத்தின் ஊடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

(viii) அக் காலப்பகுதிக்குரிய விண்ணப்பதாரர்களின் உயரிய அடைவுகள்/ஆற்றல் காண்பிக் கப்பட்டுள்ள விளையாட்டின் வெற்றிச் சான்றிதழ்கள் மூன்றிற்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படுவதோடு நேர்முகப்பரீட்சைத் தினத்தில் உரிய அனைத்து சான்றிதழ்களையும் நேர்முகப்பரீட்சைக் குழுவிற்கு சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

(ix) அவ்வாறு புள்ளிகள் உரித்தாவது ஒரே நிகழ்ச்சியில் ஒரே வருடத்தில் பெறப்பட்ட சான்றிதழ்களில் அதி உயர்வான சான்றிதழ் ஒன்றுக்கு மட்டுமே ஆகும்.

(x) சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கும் போது கருத்திற் கொள்ளப்படும் விளையாட்டு அமைச்சின் மற்றும் கல்வி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் பாடசாலை விளையாட்டுக் கழகங்களுக்குரிய விளையாட்டுக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| பெட்மின்டன் | டைக்குவாண்டோ | மல்யுத்தம் | வலைப்பந்து |
|---|---|---|---|
| நீர் விளையாட்டுக்கள் (நீச்சல்) | துரோ போல் | கூடைப்பந்து | வூஸ்சு |
| ஜூடோ | ரக்பி | மென்பந்து கிரிக்கட் | டெனிஸ் |
| சைக்கிள் ஓட்டம் | பளு தூக்குதல் | கைப்பந்து (Hand Ball) | குத்துச்சண்டை |
| எல்லே | காற்பந்து | தடகள விளையாட்டு | கபடி |
| ஹொக்கி | ஜிம்னாஸ்டிக் | கிரிக்கட் | பேஸ்போல |
| கராத்தே | மேசைப்பந்து | வொலிபோல் (Volly Ball) | உடற் பயிற்சிகள் |

**4.21 பாடநெறி இலக்கம் 21 - மனைப் பொருளியல் (சிங்களம்)**
**மனைப் பொருளியல் (தமிழ்)**

4.21.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் மனைப்பொருளியல் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.21.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் விஞ்ஞானம்/ விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**4.22 பாடநெறி இலக்கம் 22 - விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் (சிங்களம்)**
**விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் (தமிழ்)**

4.22.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல் ஆகிய மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

அல்லது

4.22.2 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தொழில்நுட்பவியல் பிரிவில் உயிரியல் முறைமைகள் தொழிநுட்பவியல், தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

அல்லது

4.22.3 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கலைப் பாடப் பிரிவில் விவசாய விஞ்ஞானம்/ விவசாயத் தொழில்நுட்பவியல்/ உயிரியல் வளத் தொழில்நுட்பவியல்/ உணவுத் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களில் ஒன்றுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.22.4. 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் விஞ்ஞானம்/ விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :-**

- ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கையின் 50% ஆனவர் கள் 4.22.1 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்தும், 25% ஆனவர்கள் 4.22.2 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்தும், எஞ்சிய 25% ஆனவர்கள் 4.22.3 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்தும் தெரிவு செய்யப்படுவர்.
- எந்தவொரு பாடத்தொகுதியின் கீழும் போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாதவிடத்து 4.22.1, 4.22.2, 4.22.3 இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு அமைய வரிசைக்கிரம அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தி எஞ்சிய வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

**4.23 பாடநெறி இலக்கம் 23 - தொழில்நுட்பக் கற்கை - கலையும் கைப்பணியும் (சிங்களம்)**
**தொழில்நுட்பக் கற்கை - கலையும் கைப்பணியும் (தமிழ்)**

4.23.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.23.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கலையும் கைப்பணியும் பாடத்திற்கு குறைந்த பட்சம் சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**4.24 பாடநெறி இலக்கம் 24 - A வடிவமைப்பும் கட்டிடத் தொழில்நுட்பமும் (சிங்களம்)**
**24 - B வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பமும் (சிங்களம்)**
**24 - C வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில்நுட்பமும் (சிங்களம்)**
**24 - A வடிவமைப்பும் கட்டிடத் தொழில்நுட்பமும் (தமிழ்)**
**24 - B வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பமும் (தமிழ்)**
**24 - C வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில்நுட்பமும் (தமிழ்)**

4.24.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பொறியியல் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத்துறைக்கான மூன்றாவது பாடமாக அங்கீகரிக்கப்பட்ட பாடங்களில் ஒரு பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

அல்லது

4.24.2 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் வன்பொருள் தொழில்நுட்பவியல் பாட பிரிவில் குடிசார் தொழில்நுட்பவியல், பொறிமுறைத் தொழில்நுட்பவியல், மின் இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்று உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.24.3 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் வடிவமைப்பும் கட்டிடத் தொழில்நுட்பமும்/ வடிவமைப்பும் இயந்திரவியல் தொழில்நுட்பமும்/ வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில்நுட்பமும்/ வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும் போன்ற பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :-**

**மிகவும் விசேடமானது**

(i) இந்த பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களினால் மேற்கூறிய 24 – A, B, C எனும் பாடநெறிகளில் ஒன்றுக்கு மாத்திரம் உரிய மொழிமூலம் விண்ணப்பிக்க முடியும்.

(ii) இந்தப் பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களினால் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது அதில் 1.0 இன் கீழ் கோரப்படும் பாடநெறிகளை குறிப்பிடும் அட்டவணையில்/அட்டவணைகளில் மிகவும் தெளிவாக மற்றும் சரியாக விண்ணப்பிக்கப்படுவது வடிவமைப்பும் கட்டிடத் தொழில்நுட்பமும் (24 - A)/ வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பமும் (24 - B)/ வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில்நுட்பமும் (24 - C) போன்ற பாடநெறிகளில் எதற்கானது என அதற்குரிய பாடநெறி இலக்கம் அதன் ஆங்கில எழுத்துடன் குறிப்பிடுவது அத்தியாவசியமாகும்.

(iii) அதன்படி அல்லாமல் ‘வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும்’ என மாத்திரம் குறிப்பிடப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மிக அவதானத்தில் கொள்ளவும்.

(iv) ஒவ்வொரு உப பாடநெறிகளுக்கு மாவட்ட அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கையில் மூன்று மடங்கை நேர்முகப்பரீட்சைக்கு அழைத்து, கீழ்க்காணும் முறையில் தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும்.

4.24.4 தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை

(அ) 4.24.1, 4.24.3 தகைமை கொண்ட விண்ணப்பதாரர்கள்

(ஆ) 4.24.2., 4.24.3 தகைமை கொண்ட விண்ணப்பதாரர்கள்

**4.25 பாடநெறி இலக்கம் 25 - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ஆங்கிலம்)**

4.25.1

4.25.1.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தில்

குறைந்தபட்சம் திறமைச் சித்தி உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.25.1.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.25.2

4.25.2.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.25.2.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியுடன் மற்றும் ஆங்கில மொழி பாடத்திற்கு குறைந்தபட்சம் திறமைச்சித்தி/ஆங்கில இலக்கியப் பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.25.3

4.25.3.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பௌதிக விஞ்ஞானப் பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.25.3.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்திற்கு குறைந்த பட்சம் அதிதிறமைச் சித்தி மற்றும் ஆங்கில பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன்/ ஆங்கில இலக்கியப் பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.25.3.3 12 ஆம் தரத்தில் பொது தகவல் தொழில்நுட்பப் பரீட்சையில் (GIT) சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு Z புள்ளி தொடரொழுங்கு அடிப்படையில் இக்குழுவிற்காகத் தெரிவு செய்யப்படுவதற்கான முன்னுரிமை உரித்தாகும்.

அல்லது

4.25.4

4.25.4.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.25.4.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்திற்கு குறைந்தபட்சம் அதிதிறமைச் சித்தி மற்றும் ஆங்கிலப் பாடத்திற்குக் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன்/ ஆங்கில இலக்கியப் பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.25.4.3 12 ஆம் தரத்தில் பொது தகவல் தொழில்நுட்பப் பரீட்சையில் (GIT) சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு Z புள்ளி தொடரொழுங்கு அடிப்படையில் இக்குழுவிற்காகத் தெரிவு செய்யப்படுவதற்கான முன்னுரிமை உரித்தாகும்.

அல்லது

4.25.5

4.25.5.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த) பரீட்சையில் கலை, வணிகம், தொழில்நுட்பவியல் மற்றும் "வேறு" போன்ற பாடத்துறைகளில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.25.5.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்திற்கு விசேட சித்தி மற்றும் ஆங்கிலப் பாடத்திற்குக் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன்/ ஆங்கில இலக்கியப் பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.25.5.3 12 ஆம் தரத்தில் பொது தகவல் தொழில்நுட்பப் பரீட்சையில் (GIT) சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு Z புள்ளி தொடரொழுங்கு அடிப்படையில் இக்குழுவிற்காக தெரிவு செய்யப்படுவதற்கான முன்னுரிமை உரித்தாகும்.

4.25.6 ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு உரிய இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக நேர்முகப்பரீட்சை மற்றும் இப்பாடநெறி நடாத்தப்படுவது நுவன்புர தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆகும்.

**கவனத்திற் கொள்க :-**

ஒவ்வொரு மாவட்டத்திலும் இணைக்கப்படும் எண்ணிக்கையின் மூன்று மடங்கினர் அவர்களது Z புள்ளி அடிப்படையில் தொடரொழுங்கில் கீழ் குறிப்பிடப்பட்ட செயன்முறை அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

அதற்கிணங்க,

(i) 4.25.1 இன் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள்.

(ii) மூன்று மடங்கினருக்காக அவ் எண்ணிக்கையில்லாதவிடத்து 4.25.2 இன் கீழ் விண்ணப்பித்துள்ள தகுதியுடைய விண்ணப்பதாரர்கள்

(iii) மூன்று மடங்கினருக்காக அவ் எண்ணிக்கையில்லாதவிடத்து அவ் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்காக 4.25.3, 4.25.4 மற்றும் 4.25.5 பிரிவுகளுக்கு வரிசைக்கிரமமப்படி முன்னுரிமை கிடைக்கும் வகையில் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் குறித்த எண்ணிக்கையில் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

4.25.7 தெரிவு செய்யும் முன்னுரிமை தொடரொழுங்கு

(i) Z புள்ளி தொடரொழுங்கிற்கமைவாக 4.25.1 இன் கீழ் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள்.

(ii) மேலும் வெற்றிடங்கள் காணப்படுமாயின் Z புள்ளி தொடரொழுங்கிற்கமைய 4.25.2 இன் கீழ் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள்.

(iii) அதற்கு அப்பால், மேலும் வெற்றிடங்கள் காணப்படுமாயின் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய எல்லாப் பாடத்துறையிலும் பொது தகவல் தொழில்நுட்பப் பரீட்சையில் (GIT) சித்தி பெற்ற, அவ்வவ் தொகுதியின் விண்ணப்பதாரர்களுக்கிடையே முன்னுரிமை பெற்றுக்கொள்ளுமாறு Z புள்ளி தொடரொழுங்கிற்கமைய 4.25.3, 4.25.4, 4.25.5 இன் கீழ் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் இந்த தொகுதியின் முன்னுரிமை தொடரொழுங்கின் கீழ் தெரிவு செய்யப்படுவார்கள்.

**4.30 பாடநெறி இலக்கம் 30 - இரண்டாம் மொழி (சிங்களம்)**

4.30.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சிங்களப் பாடத்திற்குக் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.30.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்கள மொழியும் இலக்கியமும் பாடத்திற்குக் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :-**

- இப்பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளும்போது க.பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டாம் மொழி (தமிழ்) பாடம் அல்லது அரசகரும மொழித் திணைக்களத்தின் இரண்டாம் மொழி (தமிழ்) உயர் பாடநெறி அல்லது க.பொ.த (சா.த) பரீட்சையில் விருப்பத்திற்குரிய தமிழ் பாடத்தில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு தொடரொழுங்குக்கமைய முன்னுரிமை வழங்கப்படும்.
- இப்பாடநெறிக்காக விண்ணப்பிக்கக்கூடியது நாட்டின் யாதேனும் மாவட்டத்தில் தமிழ் மொழிமூல பாடசாலையில் சேவையாற்றுவதற்கு இணங்குவதாயின் மாத்திரமே ஆகும்.

**4.31 பாடநெறி இலக்கம் 31 - இரண்டாம் மொழி (தமிழ்)**

4.31.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தமிழ்ப் பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.31.2 3.0 இல் 3.3.1 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :-**

- இப்பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளும் போது க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டாம் மொழி (சிங்களம்) பாடம் அல்லது அரசகரும மொழித் திணைக்களத்தின் இரண்டாம் மொழி (சிங்களம்) உயர் பாடநெறி அல்லது க.பொ.த. (சா.த.) பரீட்சையில் விருப்பத்திற்குரிய சிங்களப் பாடத்தில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு தொடரொழுங்குக்கமைய முன்னுரிமை வழங்கப்படும்.
- இப்பாடநெறிக்காக விண்ணப்பிக்கக்கூடியது நாட்டின் யாதேனும் மாவட்டத்தில் சிங்கள மொழிமூல பாடசாலையில் சேவையாற்றுவதற்கு இணங்குவதாயின் மாத்திரமே ஆகும்.

**4.32 பாடநெறி இலக்கம் 32 - விசேட கல்வி (சிங்களம்)**
**விசேட கல்வி (தமிழ்)**

4.32.1 2016 ஆம் ஆண்டில் அல்லது 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.32.2 க.பொ.த. (சா.த.) பரீட்சையில் 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :-**

இப்பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பாடநெறியைப் பூர்த்தி செய்த பின்னர் விசேட கல்வித் தேவைகளுடைய செவிப்புலனற்றோர், பார்வையற்றோர், மந்தப் புத்தி, ஒடிசம், கற்றல் குறைபாடுகள், பல்வேறு பலவீனங்கள் கொண்ட மாணவர்களுக்கு ஆசிரியர்களாக நியமனம் வழங்கப்படும். எனவே, மேற்கூறப்பட்ட விசேட கல்வித் தேவைகளுடைய மாணவர்கள் காணப்படுகின்ற அலகுகளில் கட்டாயம் சேவையாற்றுவதற்கு இணங்கி உடன்படிக்கை செய்ய விரும்பும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் இந்தப் பாடநெறிக்கு விண்ணப்பிக்க வேண்டும். (கல்விச் செயலாளரின் இலக்கம் 42/2012 கொண்ட சுற்றுநிருபம் மற்றும் கல்விச் செயலாளரின் இலக்கம் ED/9/18/8/2/6 மற்றும் 2017.05.17 திகதியிடப்பட்ட கடிதத்திற்கு அமைவாகும்.)

5.0 பாடநெறி இலக்கம், பாடநெறியின் பெயர், மொழி மூலத்திற்கு அமைய ஒவ்வொரு பாடநெறியும் நடைபெறும் தேசிய கல்வியியற் கல்லூரிகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

நேர்முகப்பரீட்சையின் போது ஒவ்வொரு பாடநெறிக்கும் உரிய கணினிப் பட்டியலை தயாரிக்கும் போது விண்ணப்பதாரரின் விண்ணப்பம் கணினி மயப்படுத்தப்படுவது பாடநெறி இலக்கத்திற்கு அமையவே ஆகும். சரியான தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கல்வி அமைச்சிலுள்ள கல்வியியற் கல்லூரிக் கிளைக்கு கிடைக்கப்பெற்ற பின்பு அதில் எவ்வித மாற்றங்களும் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. எனினும் எந்தவொரு பாடநெறிக்கும் கல்வியியற் கல்லூரிக்குள் தகைமை அடிப்படையில் இடநிலைப்படுத்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுப்பது கல்வியியற் கல்லூரி நிறுவக சபைக்கு/ கல்விச் செயலாளர் வசமானதாகும்.

நிரல் i – பாடநெறி இலக்கம்
நிரல் ii – பாடநெறியின் பெயர்
நிரல்iii – சிங்கள மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள்
நிரல் iv – தமிழ் மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள்
நிரல் v – ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள்.

| பாடநெறி இல. | பாடநெறியின் பெயர் | மொழிமூல அடிப்படையில் ஒவ்வொரு பாடநெறிகளும் நடைபெறும் தேசிய கல்வியியற் கல்லூரிகள் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| i | ii | iii | iv | v |
| 01 | ஆரம்பக் கல்வி | ஊவா | வவுனியா | - |
| | | நில்வளா | ஸ்ரீபாத | - |
| | | மகாவலி | அட்டாளைச்சேனை | - |
| | | சாரிபுத்த (தம்பதெனிய) | மட்டக்களப்பு | - |
| | | ஸ்ரீபாத | யாழ்ப்பாணம் | - |
| | | பஸ்துன்ரட்ட | தர்காநகர் | - |
| | | புலதிஸிபுர | - | - |
| | | வயம்ப | - | - |
| | | நுவன்புர | - | - |
| | | றுகுணு | - | - |
| | | ஹாபிடிகம | - | - |
| | | மஹரகம | - | - |
| | | வவுனியா | - | - |

| பாடநெறி இல. | பாடநெறியின் பெயர் | மொழிமூல அடிப்படையில் ஒவ்வொரு பாடநெறிகளும் நடைபெறும் தேசிய கல்வியியற் கல்லூரிகள் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 02 | விஞ்ஞானம் | நில்வளா | வவுனியா | நில்வளா |
| | | சியனை | ஸ்ரீபாத | சியனை |
| | | ஸ்ரீபாத | அட்டாளைச்சேனை | யாழ்ப்பாணம் |
| | | - | மட்டக்களப்பு | - |
| | | - | யாழ்ப்பாணம் | - |
| 03 | கணிதம் | நில்வளா | வவுனியா | நில்வளா |
| | | சியனை | ஸ்ரீபாத | சியனை |
| | | ஸ்ரீபாத | அட்டாளைச்சேனை | யாழ்ப்பாணம் |
| | | - | யாழ்ப்பாணம் | - |
| 04 | சமூக விஞ்ஞானம் | ருகுணு | ஸ்ரீபாத | - |
| | | ஸ்ரீபாத | மட்டக்களப்பு | - |
| 05 | பௌத்த சமயம் | சாரிபுத்த – நிட்டம்புவ மற்றும் தம்பதெனிய | - | - |
| 06 | இந்து சமயம் | - | வவுனியா | - |
| 07 | இஸ்லாம் | - | அட்டாளைச்சேனை | - |
| 08 | கத்தோலிக்க சமயம்/ கிறிஸ்தவ சமயம் | வயம்ப | வவுனியா | - |
| 09 | முதலாம் மொழி (சிங்களம்) | வயம்ப | - | - |
| | | பேராதெனிய | - | - |
| 10 | முதலாம் மொழி (தமிழ்) | - | ஸ்ரீபாத | - |
| | | - | தர்காநகர் | - |
| | | - | பேராதெனிய | - |
| 11 | ஆங்கிலம் | - | - | மகாவலி |
| | | - | - | பஸ்துன்ரட்ட |
| | | - | - | யாழ்ப்பாணம் |
| | | - | - | பேராதெனிய |
| 13 | சித்திரம் | மகாவலி | ஸ்ரீபாத | - |
| | | வயம்ப | மட்டக்களப்பு | - |
| | | - | யாழ்ப்பாணம் | - |
| i | ii | iii | iv | v |
| 14 | நடனம் (கீழைத்தேயம்) | மகாவலி | - | - |
| | | வயம்ப | - | - |
| 15 | நடனம் (பரதம்) | - | ஸ்ரீபாத | - |
| | | - | யாழ்ப்பாணம் | - |
| 16 | சங்கீதம் (கீழைத்தேயம்) | மகாவலி | - | - |
| | | வயம்ப | - | - |
| 17 | சங்கீதம் (கர்நாடகம்) | - | ஸ்ரீபாத | - |
| | | - | யாழ்ப்பாணம் | - |
| 18 | மேற்கத்தேய சங்கீதம் | - | - | மகரகம |
| 19 | நாடகமும் அரங்கியலும் | மகாவலி | மட்டக்களப்பு | - |
| | | வயம்ப | | - |
| 20 | உடற்கல்வி | ஊவா | வவுனியா | - |
| | | நில்வளா | மட்டக்களப்பு | - |
| | | ருகுணு | - | - |
| 21 | மனைப் பொருளியல் | ருகுணு | வவுனியா | - |
| | | - | தர்காநகர் | - |
| 22 | விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் | புலதிஸிபுர | வவுனியா | - |
| 23 | தொழில்நுட்பக் கற்கை –கலையும் கைப்பணியும் | சியனை | மட்டக்களப்பு | - |
| 24 | வடிவமைப்பும் கட்டிடத் தொழில் நுட்பவியலும்/ வடி வமைப்பும் பொறியியல் தொழில் நுட்பவியலும்/ வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில் நுட்பவியலும் | சியனை | மட்டக்களப்பு | - |
| 25 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | - | - | பஸ்துன்ரட்ட |
| | | - | - | றுவன்புர |
| | | - | - | மஹரகம |
| 30 | இரண்டாம் மொழி (சிங்களம்) | மகாவலி | - | - |
| | | வயம்ப | - | - |
| | | மகரகம | - | - |
| 31 | இரண்டாம் மொழி (தமிழ்) | - | மகாவலி | - |
| | | - | வவுனியா | - |
| 32 | விசேட கல்வி | ஹாபிடிகம | அட்டாளைச்சேனை | - |
| | | மஹரகம | யாழ்ப்பாணம் | - |

**கவனத்திற் கொள்க :-**

- தமிழ்மொழி மூலம் பாடநெறி நடத்தப்படுகின்ற தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு பெண் விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

6.0 2018 ஆம் ஆண்டிற்கு பயிலுநர்களை தேர்ந்தெடுப்பதற்கான ஒழுங்குமுறைமை

6.1 தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படை :

6.1.1 2016 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) இல் சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு 2021 ஆம் ஆண்டிலும், 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) இல் சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு 2022 ஆம் ஆண்டிலும் ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுச் செல்வதினால் பாடசாலை முறைமைக்குள் ஏற்படும் வெற்றிட எண்ணிக்கை மற்றும் தற்போது நிலவும் ஆசிரியப் பற்றாக்குறை மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் பாடப் பல்வகைமையை ஏற்படுத்துவதற்கான தேவை தொடர்பாக கவனத்திற் கொண்டு பாட அடிப்படையில் ஆசிரியர் தேவையைக் கணக்கிட்டு அவ் எண்ணிக்கை 2018 ஆம் வருடத்தில் பயிலுநர்கள் இரண்டு குழுக்களாக ஒவ்வொரு பாட நெறிக்கும் கல்வியியற் கல்லூரிகளில் ஒரே தடவையில் வழங்கப்படக்கூடிய வசதிகளின் எண்ணிக்கையோடு பொருந்துமாறு சேர்த்துக்கொள்ளப்படும் பயிலுநர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, புத்தளம், அநுராதபுரம், பொலன்னறுவை, பதுளை, மொனறாகலை மற்றும் இரத்தினபுரி ஆகிய கஷ்டப் பிரதேச மாவட்டங்களில் ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலம் முதலிய பாடநெறிகளுக்காக அவ்வவ் பாடநெறிகளுக்கு சேர்த்துக்கொள்ளப்படும் முழு எண்ணிக்கையில் அதிக சதவீதம் ஒதுக்கப்படும்.
சேர்த்துக்கொள்ளப்படும் தொகையினர் தொடர்பாக செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக அமைவது ஒவ்வொரு பாடநெறிக்கும் கல்வியியற் கல்லூரிகளில் வசதிகள் வழங்கப்படக்கூடிய எண்ணிக்கையாகும்.

6.1.1.1 அதன்படி 2018 ஆம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்படும் 2016 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) இல் சித்திபெற்ற மற்றும் 2017 ஆம் ஆண்டில் க.பொ.த.(உ.த.) இல் சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு வெவ்வேறாக கீழ்க்காணும் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்

(i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏதேனும் பாடநெறிக்குரிய மொழிமூலத்தில் உரிய மாவட்டத்திலிருந்து சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு அறியத்தரப்பட்டுள்ள எண் ணிக்கை, மாவட்ட அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் பெற்றுக் கொண்ட Z புள்ளிகளின் தொடரொழுங்குடன் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய தகைமைகளும் சரியான விதத்தில் தொடர்புபடுத்தப்பட்டு, 4.0 இல் “கவனத்திற் கொள்க” என்ற பகுதியில் மற்றும் உரிய பாடநெறியின் கீழ் காட்டப்பட்டுள்ள முறைமைக்கு அமைய தெரிவுசெய்யப்படுவர். (உடற்கல்விப் பாடநெறிக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும், உரிய மொழிமூலத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் எண்ணிக்கை, விண்ணப்பதாரர்களின் விளையாட்டு புள்ளிகளின் தொடரொழுங்குக்கு அமைய 4.0 இல் மற்றும் உரிய பாடநெறியின் கீழ் காட்டப்பட்டுள்ள முறைமைக்கு அமைய மேற்கொள்ளப்படும்).

(ii) ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஒவ்வொரு பாடநெறிக்குமாக உரிய மொழிமூலத்தில் பெருந்தோட்ட மாவட்டங்களிலிருந்து சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை, அதற்குச் செல்வாக்குச் செலுத்தும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு விண்ணப்பதாரர்கள் பெற்றுள்ள Z புள்ளியின் தொடரொழுங்கு மற்றும் ஏனைய தகைமைகள் சரியான விதத்தில் தொடர்புபடுத்தப்பட்டு 4.0 இல் “கவனத்திற் கொள்க” என்ற பகுதியில் காட்டப்பட்டுள்ள முறைமைக்கு அமைய தெரிவுசெய்யப்படுவர்.

6.1.2 Z புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படும் பாடநெறிகளில் உரிய மாவட்டத்தில் ஒரே Z புள்ளிகளைப் பெற்ற பல மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒருவரை மாத்திரம் தேர்ந்தெடுக்க வேண்டிவரும் போது/விளையாட்டுத் திறமைக்கு ஒரே புள்ளிகளைப் பெற்ற பல மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒருவரை மாத்திரம் தேர்ந்தெடுக்க வேண்டிவரும் போது, முதற் தடவை க.பொ.த (சா.த) பரீட்சையில் 3.0 இல் 3.5 இன் கீழ் குறிப்பிடப்பட்ட வகையில் பிரதான பாடங்கள் ஆறு (06) இற்கு பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் கவனத்திற் கொள்ளப்படுவதற்காகப் பயன்படுத்தப்படும்.

அதற்கிணங்க க.பொ.த. (சா.த.) பரீட்சைப் பெறுபேறுகளில் விசேட சித்திக்காக 04 புள்ளிகளும் அதி திறமைச் சித்திக்காக 03 புள்ளிகளும் திறமைச் சித்திக்காக 02 புள்ளிகளும் சாதாரண சித்திக்காக 01 புள்ளியும் என்ற வகையில் புள்ளிகள் வழங்கப்படுவதோடு அந்த மொத்தப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவு மேற்கொள்ளப்படும்.

6.1.3 உடற்கல்வி, நடனம் (கீழைத்தேயம்), நடனம் (பரதம்), சங்கீதம் (கீழைத்தேயம்), சங்கீதம் (கர்நாடகம்), நாடகமும் அரங்கியலும் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் ஆகிய பாடநெறிக்காக நடாத்தப்படும் பிரயோகப் பரீட்சையில் பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் பாடத்திற்குரிய தேர்ச்சி மட்டத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

6.1.4 மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படும்போது ஏதேனும் ஒரு பாடநெறிக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மொத்தத் தரவுத் தளத்திலும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் போதுமான எண்ணிக்கை இல்லாத பட்சத்தில் அந்த மாவட்டம் உரித்தாகும் மாகாணத்தின் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களின் உரிய தகைமைகளின் தொடரொழுங்கிலும், அவையும் போதுமான எண்ணிக்கையில் இல்லாதவிடத்து தேசிய மட்ட திறமைகள் தொடரொழுங்கிலும் கவனத்திற் கொள்ளப்பட்டு அவ் வெற்றிட எண்ணிக்கை நிரப்பப்படும்.

**6.2 நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தல்**

6.2.1 விண்ணப்பதாரர்களின் நிரந்தர வதிவிட மாவட்டம்/ மாகாணம் கீழ்க் குறிப்பிடப்பட்ட முறையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

6.2.1.1 மாவட்ட அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படும் போது விண்ணப்பதாரர் விண்ணப்பிக் கும் மாவட்டம் என்பது அவர் முதன் முறையாக க.பொ.த. (உ.த.) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் மற்றும் அதற்கு முன்னைய இரண்டு (02) வருடங்கள் நிரந்தரமாக வசித்த மாவட்டமாகும்.

6.2.1.2 இதன் போது விண்ணப்பதாரர் முதன் முறைக்கு அல்லது அதன் பின்னான அமர்வுகளில் க.பொ.த. (உ.த) பரீட்சைக்கு தோற்றிய பாடசாலை அமைந்திருப்பது விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிடத்திலிருந்து அப்பாலாக அமைந்த மாவட்டமாக இருப்பின்/ தனிப்பட்ட சௌகரியம் காரணமாக உரிய காலப்பகுதிக்குள் தற்காலிகமாக வதிந்திருந்த மாவட்டமாக இருப்பின் / தற்போது வதிவினை வேறு மாவட்டத்திற்கு மாற்றிக்கொண்டிருப்பின் அம்மாவட்டம், விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டம் என கவனத்தில் கொள்ளப்படமாட்டாது என்பது வலியுறுத்தப்படுகிறது.

6.2.1.3 மாகாண மட்ட தகைமைகளைக் கருதும் போது விண்ணப்பதாரர் முதன் முறைக்கு க.பொ.த. (உ.த) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் மற்றும் அதற்கு முன்னைய இரண்டு (02) வருடங்கள் அவர் நிரந்தரமாக வசித்த மாகாணம் விண்ணப்பதாரரின் மாகாணமாகக் கொள்ளப்படும்.

6.2.2 அனைத்து விண்ணப்பதாரர்களும் தமது நிரந்தர வதிவிடத்தினை கீழே குறிப்பிடப்பட்ட முறைக்கமைய உறுதிப்படுத்த வேண்டும்.

i. சேர்த்துக்கொள்ளப்படும் நிபந்தனைக்கு அமைவாக விண்ணப்பதாரரினால் தமது நிரந்தர வதிவிடத்தின் வாக்காளர் பெயர்ப்பட்டியலின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியூடாக உறுதி செய்யப்பட வேண்டும்.

ii. விண்ணப்பதாரரின் வயது பூரணமாகாத காரணத்தால் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பதிவு செய்யப்பட முடியாத வருடங்களுக்காக பெற்றோரின் பெயர்கள் உள்ளடங்கிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் பதிவுகளின் பிரதியூடாக வதிவிடம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

iii. யாதுமொரு காரணத்தினால் பெற்றோர்கள் அல்லாது வேறு பாதுகாவலரின் கீழ் உரிய காலப் பகுதியில் நிரந்தரமாக வதிவிடத்தைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் அந்தப் பாதுகாப்பிலிருந்த காலப்பகுதியோடு கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவிட மற்றும் நடத்தை தொடர்பான சான்றிதழ் (DS - 04) - 'வேறு காரணங்கள்' என்னும் பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதன்போது விண்ணப்பதாரரின் வாக்கு இல்லாத வருடத்திற்காக பாதுகாவலரின் வாக்காளர் பெயர்ப்பட்டியல் பிரதிகளினூடாக வதிவிடத்தை உறுதி செய்ய வேண்டும்.

iv. ஏதாவது காரணத்தால் மூன்று (03) வருடங்கள் அல்லது சில வருடங்களுக்கு உரிய வாக்காளர் பதிவுகளின் பிரதியூடாக வதிவிடத்தை உறுதிப்படுத்த முடியாத சந்தர்ப்பத்தில் வாக்காளர் பதிவு செய்ய முடியாமைக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்தை கிராம அலுவலகரினால் வழங்கப்பட்ட வதிவிட மற்றும் நடத்தை சம்பந்தமான சான்றிதழ் (DS - 04) 'வேறு காரணங்கள்' என்பதன் கீழ் அக்காலப்பகுதிக்கான நிரந்தர வதிவிட பிரதேசத்தின் கிராம அலுவலகர் கையொப்பத்துடன் பிரதேச செயலாளரின் இணை ஒப்பத்துடன் உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

v. ஒரு வருடத்திற்கோ அல்லது இரு வருடங்களுக்கோ மட்டும் உரிய வாக்காளர் இடாப்பின் பதிவுப் பிரதிகள் முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்திலும், எஞ்சிய வருடங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வேறு ஆவணங்களினால் வதிவிடம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். (உதாரணம்: கிராம அலுவலர் சான்றிதழ், ஆட்பதிவுத் திணைக்களத்தின் தேசிய ஆள் அடையாள அட்டையின் முகவரி.)

6.2.3 வாக்காளர் பெயர்ப்பட்டியலின் பிரதிகள் எதுவும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய அவசியமில்லை.

**6.3 ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்குத் தேர்ந்தெடுத்தல்.**

6.3.1 சேர்த்துக்கொள்ளும் வெற்றிட எண்ணிக்கையில் 75% இந்திய வம்சாவளி தமிழ் விண்ணப்பதாரர்களும், 25% சிங்கள இன விண்ணப்பதாரர்கள் மூலமும் வெற்றிடம் நிரப்பப்படும். (நேர்முகப்பரீட்சையின் போது இந்திய வம்சாவளித் தமிழர்கள் தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியற்றதாகவோ உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பதாரர்களுக்கு இயலுமாக இருத்தல் வேண்டுமென்பதோடு, தமது பிறப்புச் சான்றிதழில் தந்தையின் அல்லது தாயின் இனம் "இந்தியத் தமிழ்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.)

6.3.2 பெருந்தோட்ட மாவட்டங்களில் காணப்படும் வெற்றிடங்களின் போதுமான தன்மைக்கு அமைய சேர்த்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை அம்மாவட்டங்களுக்குப் பிரிக்கப்பட்டுள்ளது.

6.3.3 ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்க வேண்டியது நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தறை, காலி, குருநாகல் மற்றும் கொழும்பு ஆகிய பெருந்தோட்ட மாவட்டங்களில் வதியும் பெருந்தோட்டத்துறையில் சேவையாற்றுபவர்களின் பிள்ளைகள் மாத்திரம் ஆகும்.

6.3.4 தற்போது பெருந்தோட்டத்துறையில் சேவையாற்றுபவர்களின் பிள்ளைகள் மற்றும் தற்போது தோட்டங்களில் வசிக்கும், பெருந்தோட்டத் துறையில் 10 வருடங்கள் சேவையாற்றிய பின்,

2007– 2016 (2016 க.பொ.த. (உ.த.) சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்காக)
2008– 2017 (2017 க.பொ.த. (உ.த.) சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்காக)
ஆகிய வருட காலப்பகுதியில் ஓய்வு பெற்ற, சுகயீனம் காரணமாக சேவையிலிருந்து விலகிய அல்லது இறந்தவர்களின் பிள்ளைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

6.3.5 6.3.4 இல் குறிப்பிட்ட விண்ணப்பதாரர்கள் போதியளவில் காணப்படாவிடில் பெருந்தோட்டப்பகுதிகளில் தற்போது சேவைபுரியாவிடினும், கீழே குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யும் பெருந்தோட்டப் பிள்ளைகள் தொடர்பாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

6.3.5.1 2016 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு உரிய வகையில், 2006 ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பின்னருள்ள வருடங்களில் பெருந்தோட்டப்பகுதிகளில் குறைந்தபட்சம் ஐந்து (05), நான்கு (04), மூன்று (03) வருடங்கள் தொடர்ச்சியான சேவை புரிந்தோரின் பிள்ளைகள் தொடர்பாக தொடரொழுங்கில் கருத்திற்கொள்ளப்படும். (முன்னுரிமை வழங்கப் படுவது 2015, 2014, 2013 ஆகிய வருடங்களின் ஒழுங்குமுறையில் ஆகும்.)

6.3.5.2 2017 ஆம் ஆண்டில் க.பொ.த.(உ.த.) பரீட்சையில் சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு உரிய வகையில், 2007 ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பின்னருள்ள வருடங்களில் பெருந்தோட்டப்பகுதிகளில் குறைந்தபட்சம் ஐந்து (05), நான்கு (04), மூன்று (03) வருடங்கள் தொடர்ச்சியான சேவை புரிந்தோரின் பிள்ளைகள் தொடர்பாக தொடரொழுங்கில் கருத்திற்கொள்ளப்படும். (முன்னுரிமை வழங்கப் படுவது 2016, 2015, 2014 ஆகிய வருடங்களின் ஒழுங்குமுறையில் ஆகும்.)

6.3.6 ஏதாவது தமிழ்மொழி மூல பாடநெறியொன்றுக்கு மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரர்களில் தகைமை பெறுகின்ற போதியளவான எண்ணிக்கையினர் இல்லாது இருப்பின் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் வசிக்கின்ற தோட்டப்பகுதிகளில் சேவையாற்றாத இருப்பினும் இந்திய வம்சாவளித் தமிழ் விண்ணப்பதாரர்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும்

6.3.7 அதற்கேற்ப, போதியளவான எண்ணிக்கை இல்லாது இருப்பின் வேறு மாவட்டங்களில் வசிக்கின்ற இந்திய வம்சாவளி தமிழ் மொழிமூல விண்ணப்பதாரர்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படும்.

6.3.8

6.3.8.1 சிங்கள மொழிமூல பாடநெறிகளுக்கு பெருந்தோட்ட மாவட்டத்தில் வதியும் பெருந்தோட்டப்பகுதியில் சேவைபுரிவோரின் பிள்ளைகள் போதியளவான எண்ணிக்கை இல்லையென்றால் மீதமுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படுவது ஸ்ரீபாத / ஏனைய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அந்தப் பாடநெறிகளுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து சேர்த்துக்கொள்ளப்படும் நிபந்தனைகளின் அடிப்படையில் அவர்களின் Z புள்ளி மற்றும் வேறு பொருத்தமான தகைமைகளின் வரிசைக்கிரம அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

6.3.8.2 தமிழ் மொழிமூல பாடநெறிகளுக்கு 6.3.4 - 6.3.7 இற்கு அமைய தகைமை பெற்ற விண்ணப்பதாரர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாதிருப்பின் சேர்த்துக்கொள்ளப்படும் நிபந்தனைகளின் அடிப் படையில் அப்பாடநெறிக்காக தமிழ் மொழிமூலம் நேர்முகப்பரீட்சை இடம்பெறும் ஏனைய கல்வியியற் கல்லூரிக்கு ஊடாக காத்திருப்போர் பட்டியலில் காத்திருப்போரில் தகைமைபெற்றோரின் வரிசைக்கிரம அடிப்படையில் அவ் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

6.3.9 நேர்முகப்பரீட்சையின் போது அரச மற்றும் பதிவு செய்யப்பட்ட தனியார் தோட்ட கம்பனிகளின் ஊழியர்களின் பிள்ளைகள் அதனை உறுதி செய்வதற்காக கீழ்க்காணும் ஆவணங்களில் தமக்குரிய ஆவணங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

- தற்போது பெருந்தோட்டங்களில் சேவை புரிபவர்களாயின் தோட்டங்களில் சேவை செய்கின்றார்கள் எனவும் (அந்தக் காலப்பகுதியை குறிப்பிட்டு) மற்றும் நிரந்தரமாக தோட்டங்களில் வதிவது தொடர்பாக தோட்ட அதிகாரியால் உறுதிப்படுத்திய கடிதம்.
- பத்து ஆண்டுகள் (10) சேவையின் பின்,
- 2007 – 2016 (2016 க.பொ.த (உ.த.) சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்காக)
- 2008 – 2017 (2017 க.பொ.த (உ.த.) சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்காக)

இக் காலப்பகுதியில், சுகயீனம் காரணமாக பெருந்தோட்ட சேவையில் இருந்து விலகிக் கொண்ட அல்லது ஓய்வு பெற்றுக் கொண்ட அல்லது இறந்து போன தொழிலாளரின் குடும்ப உறுப்பினர்கள் தற்போது பெருந்தோட்டங்களில் நிரந்தரமாக வசிப்பது தொடர்பாக உரிய வதிவிடப் பதிவு மற்றும் சேவையில் இருந்து விலகிய/ஓய்வு பெற்ற வருடம் மற்றும் தினம் தெளிவாக உறுதி செய்யப்பட்டு தோட்ட அதிகாரியினால் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் கிராம அலுவலகரின் சான்றிதழ்.

- பெருந்தோட்ட சேவையில் இருந்து

  2007 அல்லது அதற்குப் பின் வருடங்களில் (2016 – க.பொ.த.(உ. த.) சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்காக) மற்றும்

  2008 அல்லது அதற்குப் பின் வருடங்களில் (2017 – க.பொ.த (உ. த.) சித்தி பெற்ற விண்ணப்பதாரர்களுக்காக)

  ஓய்வு பெற்றுள்ள/ பெருந்தோட்ட சேவையிலிருந்து விலகிய சேவையாளர்கள் தமக்குரிய ஐந்து (05) வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான காலம் தொடர்ச்சியாக சேவையாற்றியமை குறித்து உறுதிப்படுத்தி ஓய்வு பெற்ற/ தோட்ட சேவையிலிருந்து விலகிய வருடம், திகதி என்பன தெளி வாக குறிப்பிட்டு தோட்ட அதிகாரியினால் வழங்கப்பட்ட கடிதம்.

- உரிய காலப்பகுதியினுள் ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு பணம் அறவிடுவதாக/ அறவிடப்பட்டமை தொடர்பாக பதிவு இலக்கத்துடன் உறுதிசெய்யக்கூடிய கடிதம்/ கடிதங்கள் மற்றும் பெருந்தோட்டப் பகுதியில் வசிக்கின்றமை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் கிராம அலுவலர் சான்றிதழ்.

6.3.10 விண்ணப்பதாரர் கற்கையின் பின்னர் பெருந்தோட்டப்பகுதி பாடசாலைகளில் தொடர்ச்சியாக பத்து (10) வருடங்கள் சேவையாற்றுதற்கு சம்மதிப்பதாக சத்திய பிரமாணத்தை நேர்முகப்பரீட்சையின் போது கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

6.3.11 சிங்கள மொழிமூலம் கல்வி கற்கும் இந்தியவம்சாவளித் தமிழ் விண்ணப்பதாரர்கள் இருப்பின் இந்திய வம்சாவளிக்குரிய விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற்கொள்ளப்படும். அத்துடன் தமிழ் மொழிமூலம் கல்வி கற்கும் சிங்கள விண்ணப்பதாரர்கள் எனின் சிங்கள மொழி மூல விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற்கொள்ளப்படும்.

6.3.12 ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்படும் பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் பெருந்தோட்டப் பகுதிகளில் சேவைபுரிபவர்களின் பிள்ளைகளுக்கு தகைமைகளின் அடிப்படையில் தமக்குரிய மொழிமூலத்தில் பிறிதும் கல்லூரிகளில் நடைமுறைப்படுத்தப்படும் பாடநெறிக்காகவும் விண்ணப்பிக்க முடியும்.

**7.0 தேர்ந்தெடுப்பதற்கான ஏனைய விடயங்கள்**

7.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் உரிய பாடநெறிக்கான தகைமைகளை உறுதிசெய்வதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சிகள் மற்றும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சை நடைபெறும் தினத்தில் சமர்ப்பிக்க தயாராக இருத்தல் வேண்டும். அந்தந்த மாவட்டத்தில் வர்த்தமானி அறிவித்தலில் 4.0 பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு அமைய இணைத்துக்கொள்வதற்கு குறிப்பிடப்பட்ட வெற்றிட எண்ணிக்கையை விட மூன்று மடங்கு எண்ணிக்கையினர் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர். உரிய தினத்தில் முறையான அறிவித்தல் எதுவுமின்றி நேர்முகப்பரீட்சைக்காக சமுகமளிக்காவிடின் அந்த மாவட்டத்தின் விண்ணப்பதாரர்களுக்குப் பதிலாக அந்தந்த மாவட்டத்தில் தகைமைகளை கொண்ட வேறு விண்ணப்பதாரர்களை தொடரொழுங்கில் அழைக்கப்படுவதுடன் சமுகமளிக்காதோர் தொடர்பாக மீண்டும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

7.2 அனைத்து சான்றிதழ்களுக்குமான மூலப்பிரதிகள் நேர்முகப்பரீட்சைத் தினத்தில் சமர்ப்பிப்பது கட்டாயமாவதுடன் அத்தினத்தில் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்க தவறும் விண்ணப்பதாரர்கள் தொடர்பாக தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

7.3 பாடநெறியின் எதிர்பார்க்கப்பட்ட ஏற்புடைய மட்டத்தை அடைந்து ஆசிரிய தொழிலுக்குள் நுழைய விண்ணப்பதாரர்களிடம் இருக்க வேண்டிய உடல் மற்றும் உள தகவுதிறன், கல்வி அமைச்சினால் வழங்கப்படும் நியதிகள் அடிப்படையில் முதலாவது நேர்முகப்பரீட்சையின் போது உரிய நேர்முகப்பரீட்சைச் சபையினால் பரிசீலிக்கப்படும். அதன் போது பாடநெறியை தொடருவதற்கு மற்றும் ஆசிரிய தொழிலுக்குள் நுழைவதற்கு விண்ணப்பதாரரின் உடல், உள தகவுதிறன் போதுமானது என்பது தொடர்பாக அவரின் பெயர் விதப்புரையில் முன்வைக்கப்படும்.

7.4 மேலே 7.3 ஆம் பகுதியின் படி தகைமைகளுடன் அவ் இணைத்துக்கொள்ளும் நியதிகளின் கீழ் தகைமைகள் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பதிவுத் தபால் மூலம் அது குறித்து அறிவிக்கப்படும். உரிய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பதிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மீண்டும் ஒருமுறை இரண்டாவது தடவை தகைமைகள் பரீட்சிக்கும் பொருட்டு நேர்முகப்பரீட்சை சபையினால் முன்வைக்கப்பட்ட தரவுகளின் பிழையற்ற தன்மை உறுதிசெய்துகொள்ளப்படும். அதற்கிணங்க தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் உரிய தேசிய கல்வியியற் கல்லூரியில் உரிய பாடநெறிக்காக பதிவுசெய்து கொள்ளப்படுவர். தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்து கொள்ளப்படுவதற்கு உரிய தினத்திலிருந்து பத்து (10) வேலை நாட்களுக்குள் பதிவு மேற்கொள்ளப்படாவிடின் அனுமதிக்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தை அவர்கள் இழக்க வேண்டியேற்படும். அதனால் ஏற்படும் வெற்றிடம் சேர்த்துக்கொள்ளப்படும் நியதியின் கீழ் உரிய தேர்ச்சித் தொடரொழுங்குக்கமைய நிரப்பப்படும்.

7.4.1 எனவே உரிய தினத்திற்கு பதிவு செய்யாத விண்ணப்பதாரர்களால் பின்னர் மேற்கொள்ளும் கோரிக்கைகள் தொடர்பாக எக்காரணம் கொண்டும் கருத்திற்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கமாட்டாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

- மேற்குறிப்பிட்ட 7.3 அல்லது 7.4 இன் கீழ்நேர்முகப்பரீட்சை சபையினால் பரிந்துரையை பெற்றுக் கொடுக்க முடியாத மட்டத்தில் யாதேனும் விசேட பிரச்சினை நிலை அவதானிக்கப்படுமாயின் மட்டுமே விசேட குழுவிற்கு முன்வைக்கப்படும். அந்த அறிக்கை கல்வியியற் கல்லூரி நிறுவக சபை/ கல்விச் செயலாளருக்கு முன்வைக்கப்பட்டு பெற்றுக்கொடுக்கப்படும் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படும்.

7.5 முதலாவது மற்றும் இரண்டாவது நேர்முகப்பரீட்சைக்கு தோற்றிய பின்னர் கல்வியியற் கல்லூரியில் பதிவு செய் வதற்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் கல்வியியற் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் தமது ஆரோக்கியத்தினை உறுதிசெய்வதற்காக வைத்திய பரிசோதனைக்கு தோற்ற வேண்டும்.

7.6 ஏதேனும் விண்ணப்பதாரருக்கு தமது விருப்பத்தின் தொடரொழுங்கிற்கு அமைய ஏதாவதொரு க.பொ.த. (உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் 03 பாடநெறிக்கு என்ற வகையில் விண்ணப்பிக்க முடியும். எனினும், தேர்ச்சிகளின் அடிப்படையில் தகைமை பெறும் பாடநெறிக்காக மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவதோடு, பாடநெறி ஒன்றுக்கு அதிகளவு எண்ணிக்கையினர் தெரிவு செய்யப்படுவதற்காக தகைமைபெறும் பட்சத்தில் விண்ணப்பதாரர்களின் பாடநெறி விருப்புத் தொடரொழுங்கில் முன்னுரிமை வழங்கப்படுவதோடு ஒரு பாடநெறிக்காக தெரிவுசெய்யப்படுவர்.

தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஏதேனும் பாடநெறிக்காக பதிவுசெய்யப்பட்ட பின்னர் எந்தவொரு காரணத்திற்கா கவும் வேறொரு பாடநெறிக்கு பின்னர் தேர்ந்தெடுக்கப்படின் அதற்கிணங்க முதலாவது பாடநெறி அல்லது தேசிய கல்வியியற் கல்லூரியை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. அதேபோல் தேசியக் கல்வியியற் கல்லூரியொன்றில் ஏதாவதொரு பாடநெறிக்கு பதிவுசெய்த பின்னர் வேறு பிரத்தியேகக் காரணங்களினால் தேசிய கல்வியியற் கல்லூரி, பாடநெறி, பாடநெறி மொழிமூலம் மாற்றப்படுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

7.7 எந்தவொரு பாடநெறிக்கும் போதியளவு பயிலுநர்களின் எண்ணிக்கை ஏதேனும் கல்வியியற் கல்லூரிகளில் இல்லாத சந்தர்ப்பத்தில் உரிய பாடநெறி நடாத்தப்படுகின்ற அண்மையில் உள்ள வேறு கல்வியியற் கல்லூரிக்கு பாடநெறி யைத் தொடர அமர்த்தப்படுவர்.

7.8 போதியளவு ஆசிரியர் தேவை இல்லாத பாடநெறி இரத்துச் செய்யப்படுதல், சேர்த்துக்கொள்ளும் பயிலுநர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுதல் மற்றும் ஒவ்வொரு பாடநெறியையும் நிறுவனங்களில் நிலைப்படுத்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் கல்வியியற் கல்லூரி நிறுவக சபை/கல்விச் செயலாளர் வசமானதாகும்.

**8.0 பாடநெறிக்காக விண்ணப்பிப்பதற்கோ அல்லது சேர்வதற்கோ தகைமையற்றவர்கள்**

8.1 ஏற்கனவே அரச அல்லது அரச உதவி பெறும் பாடசாலைகளில், அரசில் பதிவுசெய்த பிரிவெனாக்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட வேறு கல்வி நிறுவனங்களில் ஆசிரிய நியமனம் பெற்றுள்ளவர்கள்,

8.2 அரச பாடசாலைகளில் ஆசிரிய நியமனம் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளோர்,

8.3 தற்போது வரைக்கும் தேசிய கல்வியியற் கல்லூரியில் பாடநெறியைத் தொடர்ந்து கொண்டிருப்பவர்கள் அல்லது தொடராது கைவிட்டவர்கள் அல்லது தொடர்ந்து பூர்த்தி செய்தவர்கள்,

8.4 பல்கலைக்கழகம்/ பல்கலைக்கழக நிறுவகம்/ ஏனைய உயர்கல்வி நிறுவகம் ஒன்றில் க.பொ.த.(உ.த.) தகைமைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளும் தொழிற்பயிற்சி பாடநெறி/ உயர் டிப்ளோமா/ பட்டப் பாடநெறி தொடர்வதற்காக 'அரச இலவசக் கல்வி வாய்ப்பு' என்பதன் கீழ் உள்வாரியாக பதிவு செய்துள்ள/ தொடரும் பட்டப் பாடநெறியைத் தொடர்ந்து பூர்த்தி செய்துள்ளோர், (தற்போது மேற்கூறிய நிறுவனங்களில் இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்ட பாடநெறிக்கு பதிவு செய்துள்ள மாணவர்கள் வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்த பின்னர் பதிவு இரத்து செய்யப்பட்டிருப்பின் அவர்கள் விண்ணப்பிப்பதற்கு/ அனுமதி பெறுவதற்கு தகுதியற்றவர்களாவர். மேலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்பு/ நேர்முகப்பரீட்சை நடைபெற்ற பின்பு மேற்படி நிறுவனங்களில் உரிய பாடநெறிக்கு பதிவு செய்து கொண்டு, அவற்றை இரத்துச் செய்திருப்பின் அவர்களும் அனுமதிக்கு தகுதியற்றவர்களாவார்கள்.)

8.5 ஒழுக்காற்று செயற்பாடுகளின் காரணங்களின் அடிப்படையில் அல்லது வேறு காரணங்களுக்காக தேசிய கல்வியியற் கல்லூரியின் மாணவ அந்தஸ்து இரத்துச் செய்யப்பட்டவர்கள்,

8.6 திருமணம் முடித்துள்ள/ விவாக ஒப்பந்தமொன்றில் இணைந்துள்ள/ விவாகரத்து செய்த விண்ணப்பதாரர்கள்.

**9.0 பாடநெறிக்கான நிபந்தனைகள்.**

9.1 பாடநெறியின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும். இது தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இரண்டு வருடங்கள் வதிவிடக் கற்கை பெற்றதன் பின்னர், பாடசாலைகளுக்கு இணைப்புச் செய்து ஒரு வருடகாலம் கட்டுறுப்பயில்வு மேற்கொள்ளல் உள்ளடங்குகிறது. இரண்டாவது ஆண்டின் இறுதியில் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வெளிவாரி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பயிலுனர்களின் வரவு 90**%** ஐ விட குறையாதிருக்க வேண்டும்.

9.2 சகல பயிலுநர்களும் முதலாவது ஆண்டில் மற்றும் இரண்டாவது ஆண்டில் நடாத்தப்படும் உள்ளக தொடர் மதிப்பீட்டிலும், உள்ளகப் பரீட்சைகளிலும் மற்றும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இறுதி வெளிவாரிப் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும். அத்துடன் ஆங்கில மொழி பாடநெறியைத் தொடருகின்றவர்கள் தவிர்ந்த ஏனைய சகல பாடநெறிகளைத் தொடர்கின்றவர்கள் மேற்கூறப்பட்ட பரீட்சைகளில் ஆங்கில பாடத்தில் சித்தியடைய வேண்டும்.

9.3 பயிலுநர்களுக்கு வதிவிடக் கற்கை பெறும் இரண்டு வருடங்களுக்கு ஒரு வருடத்திற்கு பத்து (10) மாதங்களுக்காக மாதமொன்றிற்கு ரூ. 5000.00 பெறுமதி கொண்ட உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். கட்டுறுப்பயில்வு காலத்தில் பத்து (10) மாதங்களுக்காக மாதமொன்றிற்கு ரூ. 5000.00 வீதமும் கொடுப்பனவு செலுத்தப்படும். சொந்தத் தேவைகளுக்கான ஏனைய செலவுகளை பயிலுநர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

9.4 தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவாகும் விண்ணப்பதாரர்களுக்கு பாடநெறிக்குச் செலவாகும் நிதி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக கல்வி அமைச்சின் செயலாளருடன் ரூபா ஐந்து லட்சம் (ரூ.500,000.00) முறி மற்றும் உடன்படிக்கையொன்றில் ஒப்பமிட வேண்டும். விண்ணப்பதாரர்கள் தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்த தினத்திலிருந்து நாட்காட்டியில் அறுபது (60) தினங்களுக்குள் பாடநெறியை இடைநிறுத்துவாராயின் பயிலுனருக்காக செலவிடப்பட்ட தொகையை அரசுக்கு மீளச் செலுத்திய பின்பு விலகிக் கொள்ள முடியும். விண்ணப்பதாரர்கள் தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்த தினத்திலிருந்து நாட்காட்டியில் அறுபது(60) தினங்களின் பின்னர் பயிற்சியை இடைநிறுத்துவாராயின் இப்பிணை முறியின் முழுத்தொகையையும் (ரூ.500,000.00) அரசுக்கு செலுத்த வேண்டும். மேலும் யாதேனும் விண்ணப்பதாரர் எந்தவொரு முறையான அறிவித்தலுமின்றி ஒரு மாதத்திற்கு குறையாத காலப்பகுதிக்கு பாடநெறியின் கல்வி நடவடிக்கைகளுக்கு பங்குபற்றாதிருப்பின் அவர் பாடநெறியைக் கைவிட்டுச் சென்றதாக கருதப்பட்டு இப்பிணை முறி மற்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட முழுத்தொகையையும் (ரூ.500,000.00) அரசுக்கு செலுத்திய பின்னர் பாடநெறியிலிருந்து விலகிக்கொள்ள முடியும்.

பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் அரச பாடசாலையொன்றிற்கு வழங்கப்படும் ஆசிரிய நியமனத்தைப் பெற்றுக்கொள்ளாவிடின் இப்பிணை முறி மற்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட முழுத்தொகையையும் (ரூ.500,000.00) அரசுக்குச் செலுத்த வேண்டும். மேலும் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் அரச பாடசாலையொன்றிற்கு வழங்கப்படும் ஆசிரிய நியமனத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஐந்து (05) வருடங்கள் அரச சேவையில் இருக்காதவர், சேவையாற்ற வேண்டிய ஐந்து வருடத்தில் எஞ்சிய காலங்களுக்கு (மாத அடிப்படையில் கணக்கிடப்பட்டு) உரிய தொகையை செலுத்த வேண்டும்.

செலுத்தப்பட வேண்டிய தொகையானது

ரூ.500,000.00
———————— X பூரணப்படுத்துவதற்கு எஞ்சியுள்ள மாதங்கள்
60 மாதங்கள்

எனக் கணக்கிடப்படும்.

9.4.1 விசேட மருத்துவ காரணங்களுக்காக பாடநெறியைத் தொடரும் காலப்பகுதியில் பாடநெறியைவிட்டு விலகவேண்டியேற்படுமாயின் கீழ்க்காணும் ஆவணங்கள் சகிதம் நோயின் உண்மைத்தன்மை உறுதி செய்யப்பட வேண்டும்.

- பிணியுற்ற நிலைமை காரணமாக சிகிச்சை பெறுவதற்கான ஏற்புடைய வைத்திய அறிக்கை.
- மேலும் கல்வி நடவடிக்கையை மேற்கொள்ள உகந்த ஆரோக்கியமின்மை தொடர்பாக அரச மருத்துவரினால் உறுதி செய்த கடிதம்.

உரிய ஆவணங்கள் தொடர்பில் கவனஞ்செலுத்தப்பட்டு, கல்வியியற் கல்லூரி முகாமைத்துவக் குழுவினால் நோக்கப்பட்டு பரிந்துரைப்புகள் முன்வைக்கப்பட்ட பின் கல்வி அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவினதும் சுகாதார அமைச்சினால் அனுப்பப்பட்ட அரச வைத்தியசாலையின் வைத்தியர் அல்லது வைத்திய சபையினதும் சிபாரிசுகளைப் பெற்று அதற்காக கல்வியியற் கல்லூரி நிறுவக சபை/ கல்விச் செயலாளரின் அனுமதி பெறப்பட்டு எவ்வித அறவிடலும் இன்றி பாடநெறியிலிருந்து விலகிக்கொள்ள வாய்ப்பளிக்கப்படும்.

9.4.2 சட்டப்படி பாடநெறியிலிருந்து விலகிக்கொள்ளாமல் பாடநெறியைத் தொடரும் காலப்பகுதியில் அல்லது நிரந்தர ஆசிரிய நியமனம் பெறும் வரையான காலப்பகுதியில் வெளிநாடு செல்வதற்காக எந்தவொரு பயிலுநருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

9.5 பாடநெறியைத் தொடரும் பகுதியில் ஒழுக்காற்றுக் காரணமாகவோ அல்லது சேர்த்துக்கொள்வதன் பொருட்டு போலித் தகவல்கள் முன்வைத்ததன் அடிப்படையில் 8.0 பகுதியில் குறிப்பிடப்பட்ட வகையில் விண்ணப்பித்தமை அல்லது அனுமதிக்கு தகைமையின்மை போன்ற பகுதிக்கு உரிய வகையில் போலித் தகவல்கள் வழங்கப்பட்ட அடிப்படையில் பாடநெறியை விட்டு விலக்கும் போது பிணை முறியின் முழுப்பெறுமதி (ரூ.500,000.00) அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9.6 பாடநெறியைத் தொடரும் காலப்பகுதிக்குள் பயிலுனருக்கு பகுதி 8.4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாடநெறியைத் தொடர்வதற்கு எவ்விதத்திலும் அனுமதி வழங்கப்படமாட்டாது. அவ்வாறு பாடநெறிகளில் கலந்துகொள்வதாக உறுதி செய்யப்படும் பட்சத்தில் பயிலுநர் ஒப்பமிடுகின்ற பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்தின் மொத்தப் பெறுமதி (ரூபா. 500,000.00) மீள அறவிடப்பட்டு பாடநெறியிலிருந்து நீக்கப்படுவர்.

9.7 பாடநெறியைத் தொடரும் காலப்பகுதியில் பயிலுநர் திருமண உடன்படிக்கை செய்தல்/ திருமணம் செய்தல் அல்லது விண்ணப்பிக்கும் போது/ பதிவு செய்வதற்கு முன்னர் திருமணமானவர்/ திருமண உடன்படிக்கை செய்தவர்/ விவாகரத்தானவர் என உறுதி செய்யப்படின் மாணவ அந்தஸ்து இரத்துச் செய்யப்படும். திருமணமானமை தெரிய வந்ததன் பின்னர் எந்தவொரு காரணத்தினாலும் பாடநெறிக் காலப்பகுதிக்குள் விவாகரத்து செய்திருந்தாலும் எக்காரணம் கொண்டும் மீண்டும் மாணவர் அந்தஸ்து வழங்கப்படமாட்டாது.

9.8 மதகுருமார்களுக்கான/ துறவிகளுக்கான விசேட ஒதுக்கீட்டின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் பதிவு செய்ததன் பின்னர் பாடநெறிக் காலத்திலே சாதாரண வாழ்க்கைக்கு தம்மை மாற்றிக்கொண்டாராயின் பிணை முறிக்கு அமைய முழுப்பெறுமதி (ரூ.500,000.00) அறவிடப்பட்டு பாடநெறியிலிருந்து விலக்கப்படுவார்கள். பாடநெறியை முடித்துக்கொண்டதன் பின்னர் சகல சமயங்களுக்குமுரிய மதகுருமார்/துறவிகள் தமது துறவி வாழ்க்கையைக் கைவிடுவதில்லையென்றும் குறைந்தது ஐந்து (05) வருடங்களுக்கு கல்வி அமைச்சுக்கு சேவையாற்றுவதாகவும் கல்வி அமைச்சுடன் பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்துக்கு உடன்பட வேண்டும். யாதும் காரணத்தால் உரிய ஐந்து (05) வருட பூர்த்திக்கு முன் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதாயின், எஞ்சிய காலத்துக்காக (மாத அடிப்படையில் கணக்கிடப்பட்டு) பிணைமுறி உடன்படிக்கைக்கு உரிய தொகை கணக்கிடப்பட்டு, அந்த முழுத்தொகை அரசுக்கு செலுத்தப்பட வேண்டும்.

செலுத்தப்பட வேண்டிய தொகையானது

ரூ.500,000.00
———————— X பூரணப்படுத்துவதற்கு எஞ்சியுள்ள மாதங்கள்
60 மாதங்கள்

என அமையும்.

கவனத்திற் கொள்க :-

- இதன்போது தகுதிகாண் காலத்துக்குள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பின் உரிய தொகை அறவிடப்பட்டு சேவையிலிருந்து விலக்கப்படுவார்.

9.9 பாடநெறியைத் தொடரும் காலத்திற்குள் எதிர்பார்க்கப்பட்ட பழக்கவழக்கங்கள், வரவு, ஆர்வம் உட்பட பிறிதும் கல்விச் செயற்பாடுகளில் முன்னேற்றங்களைக் காண்பிக்காத (இணைப்பாடவிதான செயற்பாடுகள் உட்பட) பயிலுநர்கள் பாடநெறியைத் தொடர்வதிலிருந்து நீக்கப்படுவர். அத்துடன் நிறுவனப் பயிற்சியின் முதலாவது ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் போது திருப்திகரமான மட்டத்தை அடையத் தவறும் போது பாடநெறியிலிருந்து நீக்கப்படுவர். இது தொடர்பாக கல்வியியற் கல்லூரி நிறுவக சபையின்/ கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

9.10 பாடநெறியைத் தொடரும் கால எல்லைக்குள் பயிலுநர் உடல், உள பொருத்தம் தொடர்பாக பீடாதிபதி அல்லது கட்டுறுப்பயில்வு கால எல்லைக்குள் அதிபரின் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் மீண்டும் விசேட நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதன் அறிக்கை கல்வியியற் கல்லூரி நிறுவக சபைக்கு/ கல்விச் செயலாளருக்குச் சமர்ப்பித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

9.11 பாடநெறியைத் தொடரும் காலத்தின் போது கல்வியியற் கல்லூரியின் ஒழுக்க விதிமுறைகளுக்கு ஊறுவிளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவது உறுதிசெய்யப்படுமாயின் அது தொடர்பாக கல்வியியற் கல்லூரியின் ஒழுக்காற்றுச் சபையின் விதப்புரைக்கு அமைய குறித்த காலப்பகுதியில் வகுப்புத்தடை செய்தல்/ பாடநெறிக்காலத்தை நீடித்தல்/பாடநெறியிலிருந்து நீக்கப்படுதல்/ பிறிதும் பொருத்தமான தண்டனைக்குட்படுத்தலுக்கான அதிகாரம் கல்வியியற் கல்லூரி நிறுவக சபையின்/ கல்விச் செயலாளரின் வசமானதாகும்.

9.12 பாடநெறியைத் தொடரும் காலப்பகுதியில் பயிலுநர் யாதுமொரு பிற பாடநெறியை பின்பற்றுவதற்காக வாரநாட்கள்/ வாரயிறுதி நாட்களில் நிறுவனத்தை விட்டு வெளியே செல்ல எவ்விதத்திலும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

9.13 கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சகிதம் முதல் ஐந்து வருட காலம் ஆசிரிய சேவையில் இருக்கும் போது யாதேனும் காரணத்துக்காக சேவையிலிருந்து விலகுவதாயின் அல்லது வெளிநாடு செல்வதாயின் உரிய பிணைமுறி உடன்படிக்கைக்கு அமைய முழுத்தொகையான ஐந்து லட்சத்தில் (ரூ.500,000.00) எஞ்சியிருக்கும் காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய (மாதங்கள் அடிப்படையில் கணக்கிடப்பட்டு) தொகை அரசுக்கு செலுத்தப்பட வேண்டும்.

செலுத்தப்பட வேண்டிய தொகையானது

ரூ.500,000.00
———————— X பூரணப்படுத்துவதற்கு எஞ்சியுள்ள மாதங்கள்
60 மாதங்கள்

என அமையும்.

**கவனத்திற் கொள்க:**

- முதல் ஐந்து வருட காலப்பகுதிக்குள் 9.13 பகுதியில் குறிப்பிட்டவாறு சேவையிலிருந்து விலகினால் மீண்டும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரியாக ஆசிரிய தொழிலில் நுழைவதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்படமாட்டாது.
- அரச பாடசாலையில் முதல் நியமனத் திகதி தொடக்கம் 05 வருட காலப்பகுதிக்கு உயிர்ப்பான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்யாத காலத்துக்காக அந்த கற்பித்தலில் தேசிய டிப்ளோமா கொண்ட ஆசிரியருக்குரிய விபர டிப்ளோமாச் சான்றிதழை கோருவதற்கு தகைமையற்றவர்.
- ஆசிரிய சேவையின் முதல் ஐந்து (05) வருடங்களைப் பூர்த்தி செய்யாத தகுதிகாண் காலத்துக்குட்பட்ட கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரி ஆசிரியருக்கு கல்விச் செயலாளரின் 24/2017 சுற்றறிக்கையின்படி மற்றும் வர்த்தமானி அறிவித்தல், உடன்படிக்கை, பிணைமுறி, தாபனக்கோவை ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகளும் உரிய காலப்பகுதியினுள் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய ஒழுங்குவிதிகளும் செல்லுபடியாகும் என்ற வகையில் கல்விச் செயற்பாடுகளுக்காக மாத்திரம் சம்பளமற்ற லீவு பெற்று வெளிநாடு செல்லலாம்.
- ஆசிரிய சேவையின் முதல் ஐந்து (05) வருடங்களைப் பூர்த்தி செய்யாத எனினும் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரி ஆசிரியருக்கு கல்விச் செயலாளரின் 24/2017 சுற்றறிக்கையின்படி மற்றும் வர்த்தமானி அறிவித்தல், உடன்படிக்கை, பிணைமுறி, தாபனக்கோவையின் XII அத்தியாயத்தில் 16 ஆவது பகுதியில் குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் உரிய காலப்பகுதியினுள் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய ஒழுங்குவிதிகளும் செல்லுபடியாகும் என்ற வகையில் அதற்கமைய கல்விச் செயற்பாடுகளுக்காக/ வேலை நடவடிக்கைகளுக்காக சம்பளமற்ற லீவு பெற்று வெளிநாடு செல்லலாம்.

9.14 பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் பயிலுநர்களுக்கு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா வழங்கப்படும். பாடநெறி சார்ந்த பணிகள் மற்றும் ஆளுமை விருத்தி (கட்டாயமாக பங்கேற்க வேண்டிய பாட இணைச் செயற்பாடுகள் உட்பட) பாடநெறி தொடரும் காலத்திற்குள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுவதுடன், இம்மதிப்பீடு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் இறுதி மதிப்பீட்டுப் பிரிவாகும்.

9.15 கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பெற்றுக்கொண்ட பயிலுநர்களுக்கு அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் பெற்றுக் கொடுக்கப்படும். இவர்கள் மாவட்ட/ மாகாண/ தேசிய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு இடநிலைப்படுத்தும் போது உரிய மாவட்டத்தில்/ உரிய மாகாணத்தில் வெற்றிடம் இல்லாவிடின், நாட்டின் ஏதாவது ஒரு இடத்தில் சேவைபுரிவதற்கு இணங்க வேண்டும். (இரண்டாம் மொழி சிங்களம்/தமிழ் பாடநெறிக்காக 4.30/4.31 இன் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகள் உரித்தாகும்) இடநிலைப்படுத்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் அனுமதியுடன் கல்வியியற் கல்லூரி நிறுவக சபையின்/கல்விச் செயலாளரின் வசமானதாகும்.

9.15.1 பாடநெறிக்காக தெரிவு செய்யப்படுவதற்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உடன்படுவாராயின் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படும் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்க வேண்டும்.

9.15.2 மேற்கூறப்பட்ட நிபந்தனையின் கீழ் பாடநெறியைத் தொடரும் விண்ணப்பதாரர்கள் கட்டாயமாகத் தாம் பயிலும் பாடநெறிக்குரிய பாடத்தைக் கற்பிக்க வேண்டும். மேலும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்த பின், மாவட்ட/ மாகாண/ தேசிய அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர்கள் முதல் நியமனம் பெறும், தமது நிரந்தர வதிவிட மாவட்டத்தில்/ நிரந்தர வதிவிட மாகாணத்தில் அல்லது தேசிய மட்ட அடிப்படையில் குறிப்பிடப்பட்ட மாவட்டத்தில் அல்லது முதல் நியமனம் பெறும் யாதேனுமொரு மாவட்டத்தில்/ மாகாணத்தில் முதல் நியமனத் திகதி தொடக்கம் குறைந்த பட்சம் ஐந்து வருடங்கள் (05) சேவையாற்றுவது கட்டாய சேவை நிபந்தனையாகும் எனக் கவனத்திற் கொண்டு கல்வி அமைச்சின் செயலாளருடன் பிணைமுறி மற்றும் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும்.

9.16 கல்வி அமைச்சினால் பாடநெறிக்காக சேர்த்துக் கொள்ளப்படுகின்ற தேசிய கல்வியியற் கல்லூரியை, வைத்திய/ தனிப்பட்ட காரணங்களுக்காக மாற்றிக்கொள்வதற்கு யாராவது ஒரு பயிலுநர் முயற்சிக்கின்றாராயின் அவர் தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றுக்கு அனுமதி பெறுவதற்கு தகைமை பெறமாட்டார்.

9.17 சேர்த்துக்கொள்ளும் செயன்முறை ஒழுங்குவிதிகள் நடைமுறைப்படுத்தப்படும் போது அது தொடர்பான உரிய அலுவலர்களுக்கு பயிலுனரினால் அல்லது அவருடன் தொடர்புடைய பிற நபர்களால் முறையற்ற செல்வாக்குகள் செலுத்தப்பட்டால் அவர் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு தகைமை இல்லாதவராக கருதப்படுவார்.

9.18 <u>விண்ணப்பதாரரினால் விண்ணப்பிக்கும் பாடநெறிக்குரிய அனைத்து கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்திற்கு (2019.02.15) அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்த வேண்டும்.</u>

9.19 விண்ணப்பதாரருக்கு நேர்முகப்பரீட்சை அல்லது தெரிந்தெடுக்கப்படுவதற்குரிய அல்லது ஏதேனும் முறையீடு சமர்ப்பிப்பதற்கு அவசியமேற்படின், நேர்முகப்பரீட்சை ஆரம்பித்த முதல் திகதி தொடக்கம் பயிலுநர் கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்யப்படும் முதல் திகதியின் ஒரு மாத காலப்பகுதிக்குள் தமக்கு ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக முறையீடு முன்வைக்க முடியும். அதற்குரிய மாதிரிப்படிவம் உரிய காலப்பகுதியினுள் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படுவதோடு அதனை சரியான விதத்தில் பூர்த்தி செய்து, விண்ணப்பப்படிவத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி மற்றும் விடயங்களை உறுதிப்படுத்தக்கூடிய ஏனைய ஆவணங்களையும் உறுதிப்படுத்திய பிரதிகளை இணைத்து குறித்த முகவரிக்கு கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

9.20 ஏதேனும் கல்வியியற் கல்லூரிக்கு ஏதேனும் பாடநெறிக்கு, உரிய மொழிமூலத்தில், உரிய மாவட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய எண்ணிக்கை நிரப்பப்படுவதற்கு மாவட்ட/ மாகாண/ தேசிய தேர்ச்சிகளின் தொடரொழுங்கில் தகைமை பெற்றோர் போதுமான அளவில் இல்லாதிருப்பின் அக் கல்வியியற் கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்படும் ஏதேனும் பாடநெறிகளில் கல்வி முறைமைக்குள் காணப்படும் அதிகளவிலான ஆசிரிய தேவைப்பாடுள்ள பாடநெறிக்கு முன்னுரிமை கிடைக்கும் வகையில் அவ்வப் பாடநெறியின் கீழ் தகைமை கொண்ட விண்ணப்பதாரர்கள் மூலம் எஞ்சிய வெற்றிடம் பூர்த்தி செய்யப்படும். (வர்த்தமானி அறிவித்தலில் 'ஆரம்பக்கல்வி பாடநெறி' இன் கீழ் கவனத்திற் கொள்க - **iv** மற்றும் 'ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு தேர்ந்தெடுக்கப்படல்' இன் கீழ் 6.3.8 இல் காட்டப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர)

10.0 **விண்ணப்பித்தல்**

'விண்ணப்பப்படிவத்தை தயாரிப்பது சம்பந்தமாக அறிவுறுத்தலின்' கீழ் 7.0 இல் 7.1, 7.2 மற்றும் 7.3 பகுதியின் கீழ் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிக்கும் மாவட்ட மட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை தொடர்பாக மிகவும் தெளிவாக விளங்கிக்கொண்டு அதன்படி விண்ணப்பிக்க வேண்டும்.

10.1 மிக முக்கியமானது

10.1.1 அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சார்த்த திட்டமாக தற்போது நடைமுறைப்படுத்தப்படும் இணையவழி முறைமை (Online System) மூலம் தமது விண்ணப்பத்தை அனுப்பி வைப்பது கட்டாயமானதாகும்.

10.1.2 கல்வியியற் கல்லூரிக்குள் பிரவேசிப்பதற்காக இணையவழி முறைமை (Online System) மூலம் விண்ணப்பித்தலின் முதல் தடவை இது என்பதால், அனைத்து விண்ணப்பதாரர்களும் இணையத்தளம் ஊடாக அனுப்பப்படும் விண்ணப்பப்படிவத்திற்கு மேலதிகமாக, வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வண்ணம் உரிய மாதிரிக்கமைவாக ஒழுங்குபடுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பது கட்டாயமானதாகும்.

10.1.3 இணையவழி முறைமை (Online System) மூலம் விண்ணப்பப்படிவத்தினை அனுப்பி வைப்பது ஆங்கில மொழிமூலமாக <u>மாத்திரம்</u> மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அதனூடாக பதிவு செய்வதற்காக இங்கு காட்டப்பட்டுள்ள URL (Uniform Resource Locator) முகவரிக்கு உள்நுழைந்து விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உரிய கூட்டினுள் இடுவதன் மூலம் பதிவு செய்தலின் மூலம் கணினி நிகழ்ச்சித் திட்டத்திற்குள் (Computreized Program) உள்நுழைய முடியும்.

உரிய URL முகவரி —— ncoeadmissionmoe.net

↓

Application
enter your National Identity Card Number

10.2 பதிவுத்தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுவதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களை வாசித்து விளங்கிக் கொண்டு அதற்கமைய விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

10.2.1 2016 ஆம் ஆண்டின் க.பொ.த. (உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் - விண்ணப்பப்படிவத்தில் அதற்காக வழங்கப்பட்டுள்ள அட்டவணையில் (1.2) தமது விருப்பத்தினை தொடரொழுங்கில், அதிகபட்சமாக மூன்று (03) பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

10.2.2 2017 ஆம் ஆண்டின் க.பொ.த. (உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் - விண்ணப்பப்படிவத்தில் அதற்காக வழங்கப்பட்டுள்ள அட்டவணையில் (1.3) தமது விருப்பத்தினை தொடரொழுங்கில், அதிகபட்சமாக மூன்று (03) பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

10.2.3 யாதேனும் விண்ணப்பதாரர் 2016 ஆம் ஆண்டின் க.பொ.த. (உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் அதேபோல 2017 ஆம் ஆண்டின் க.பொ.த. (உ.த.) பெறுபேறுகளின் அடிப்படையில் கல்வியியற் கல்லூரிக்கு பிரவேசிப்பதற்காக விண்ணப்பிப்பாராயின், அவ்விரு சந்தர்ப்பங்களிலும் தமது Z புள்ளியின் அடிப்படையில் மிகவும் தகைமை பெறும் மூன்று (03) பாடநெறிகளுக்கு விருப்புத் தொடரொழுங்கில் உரிய அட்டவணை இரண்டிலும் (1.2 மற்றும் 1.3) குறிப்பிடல் வேண்டும்.

10.2.4 மேற்கூறிய 10.2.3 சந்தர்ப்பத்தில் 2016 மற்றும் 2017 வருடங்கள் இரண்டிற்காகவும் <u>ஒரே</u> விண்ணப்பப்படிவத்தில் சரியாகவும் கவனமாகவும் உரிய தகவல்கள் குறிப்பிடப்பட வேண்டியிருப்பதோடு, ஏதேனும் காரணங்களினால் இரண்டு (02) வருடங்களுக்காக இரண்டு (02) விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்படலாகாது. அவ்வாறு சமர்ப்பிப்பின் விண்ணப்பப்படிவங்கள் இரண்டும் அதன் காரணத்தினால் நிராகரிக்கப்பட முடியும்.

10.2.5 முழு வர்த்தமானி அறிவித்தலையும் மிகவும் கவனமாக வாசித்துப் பார்த்து, தமது தகைமைகளுக்கு மிகவும் பொருந்தும் பாடநெறியைத் தெரிந்து விண்ணப்பிக்கும் பொறுப்பு விண்ணப்பதாரரின் கடமையாவதோடு, ஏதேனும் காரணத்தினால் விண்ணப்பப்படிவத்தில் உள்ளடக்கப்பட்ட பாடநெறி தொடர்பான தகவல்கள் பின்னர் மாற்றியமைக்கப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

10.3 ஒரு பாடநெறிக்கு இரண்டு மொழிமூலம் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அது இரண்டு (02) பாடநெறிகளுக்கு விண்ணப்பித்ததாக கருதப்படும். அவ்வாறான விண்ணப்பதாரர்களுக்கு மற்றுமொரு பாடநெறிக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். ஒவ்வொரு சமய மதகுருமார் தமது சமயத்திற்கு பொருத்தமான பாடநெறிக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

உதாரணம் : விஞ்ஞானப் பாடநெறி சிங்கள மொழிமூலம் மற்றும் ஆங்கில மொழிமூலம் ஆகிய இரண்டு மொழிமூலங்களிலும் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் இரண்டு பாடநெறிகளுக்கு விண்ணப்பித்ததாகக் கருதப்படுவர். எனவே அவ்விண்ணப்பதாரருக்கு விண்ணப்பிக்க முடிவது மேலும் ஒரு பாடநெறிக்கு மாத்திரமே ஆகும்.

10.4 புத்த சமயம், இந்து சமயம், இஸ்லாம் சமயம், கத்தோலிக்க சமயம்/ கிறிஸ்தவ சமயம், உடற்கல்வி, மேற்கத்தேய சங்கீதம் போன்ற பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் தமது விண்ணப்பப்படிவத்தின் மூலப்பிரதியுடன் உறுதிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகள் இரண்டினை <u>மாத்திரம்</u> இணைத்து ஒரே கடிதவுறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

10.5 மேலே இலக்கம் 10.4 இல் குறிப்பிட்ட சந்தர்ப்பம் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் ஆவணங்களை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதலாகாது.

10.6 விண்ணப்பப்படிவத்தின் அனைத்து பகுதிகளையும் வர்த்தமானி அறிவித்தல் மற்றும் விண்ணப்பப்படிவத்தில் உள்ள அது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருப்பதோடு விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடிதவுறையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடிதவுறையின் மாதிரி கீழே காட்டப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| 2018 - தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்<br>2016 [ ] 2017 [ ]<br>(உரிய வருடம் / வருடங்களில் '✓' அடையாளமிடவும் | |
| | பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி),<br>தேசிய கல்வியியற் கல்லூரிக் கிளை,<br>கல்வி அமைச்சு,<br>இசுருபாய,<br>பத்தரமுல்லை. |

(பரீட்சைத் திணைக்களத்திற்கு அல்லது தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைப்பதை தவிர்த்துக்கொள்ளவும்)

10.7 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் 2019.02.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி), தேசிய கல்வியியற் கல்லூரிக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலிலும் அதேபோல் இணையவழி முறைமை (Online System) ஊடாகவும் அனுப்புதல் வேண்டும்.

10.8 <u>சகல விண்ணப்பதாரர்களும் பூர்த்தி செய்து அனுப்பிய விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியொன்றை கட்டாயம் தம்மிடம் வைத்திருக்க வேண்டும்</u> - தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்ளும் நேர்முகப்பரீட்சையின் போது பிரதிகளை சமர்ப்பிப்பது கட்டாயமாவதுடன் சேர்த்துக்கொள்வது தொடர்பாக ஏதேனும் விளக்கங்கள் அல்லது மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் விண்ணப்பப்படிவம் அனுப்பிய பதிவுத் தபால் **பற்றுச்சீட்டு மற்றும் விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியைச் சமர்ப்பிக்க** வேண்டும்.

**இது தொடர்பான அலட்சியப் போக்கினால் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பின்னர் விண்ணப்பத்தின் நிழற் பிரதியொன்றை கல்வி அமைச்சில்/ தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கோருவதை தவிர்ப்பதோடு அந்நிறுவனங்களிடமிருந்து பிரதிகள் வழங்கப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.**

10.9 பரீட்சை இலக்கம், வருடம், பாடநெறி இலக்கம், பாடநெறியின் பெயர் மற்றும் பாடநெறியின் மொழிமூலம் போன்றவற்றை சரியாகக் குறிப்பிடாத விண்ணப்பப்படிவங்களும் மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

10.10 ஏதாவதொரு பாடநெறிக்கு வர்த்தமானி அறிவித்தலின்படி தகைமை கொண்டிராமல் விண்ணப்பித்த பின்னர், அதனால் விண்ணப்பதாரருக்கு ஏற்படும் அசௌகரியம் தொடர்பில் கல்வி அமைச்சு பொறுப்பேற்கமாட்டாது.

விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட பின்னர் அதில் குறிப்பிடப்பட்ட பாடநெறி தொடர்பான தகவல்கள் போல **Z** புள்ளிகள் உள்ளடக்கப்படுவதற்கு / **Z** புள்ளி மாற்றப்பட/ நிரந்தர வதிவிட மாவட்டம் அல்லது முகவரி மாற்றப்படுவதற்கு/ பெறுபேறுகள் மாற்றப்படுவதற்கு/ நிழற் பிரதிகளை இணைத்தல் போன்றவை தொடர்பாக மேற்கொள்ளப்படும் கோரிக்கை அனைத்தும் நிராகரிக்கப்படும் என்பது மேலும் வலியுறுத்தப்படுகின்றது.

10.11 விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாகவோ/ நிராகரிக்கப்பட்டதாகவோ விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது. அதேபோல் விண்ணப்பதாரர்களினால் விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிக்கும் பட்சத்திலோ நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் பட்சத்திலோ தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டதாக கருத முடியாது. மேலும் அம் மாவட்டத்துக்கு உட்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு ஏற்ப மாத்திரமே சேர்த்துக்கொள்ளப்படுவர். இது தொடர்பான சகல முடிவும் கல்வியியற் கல்லூரி நிறுவக சபை/ கல்வி அமைச்சின் செயலாளரையே சாரும்.

10.12 விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ் மோசடி செய்யப்பட்ட சான்றிதழ் என பின்னர் தெரியவருமிடத்து விண்ணப்பதாரர் பாடநெறியிலிருந்து/ சேவையிலிருந்து நீக்கப்படுவதுடன் அதன் பின் அரச சேவையில் எந்தவொரு அரச நியமனத்தையும் பெற்றுக்கொள்ள தகைமையற்றவராவார்.

11.0 வர்த்தமானி அறிவித்தலில் மேற்கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் எழும் பிரச்சினைகள் அல்லது விசேட சந்தர்ப்பங்கள் தொடர்பாக கல்வியியற் கல்லூரி நிறுவக சபையின்/ கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

12.0 இவ் வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள மொழிமூலம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கில மொழிகள் மூலமான வாசகங்களில் ஏதாவதொரு தொடர்பின்மை தெரியவரும் பட்சத்தில் சிங்கள மொழி வாசகங்களே வலுவில் உள்ளதாகும்.

பத்மசிறி ஜயமான்ன
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்லை
2019, சனவரி மாதம் 14 ஆந் திகதி.

### விண்ணப்பப்படிவம் தயாரித்தலுக்கான அறிவுறுத்தல்கள்

1.0 வர்த்தமானி அறிவித்தலில் 10.0 'விண்ணப்பித்தல்' இன் கீழ்க் காட்டப்பட்டுள்ள 10.1 - 10.12 வரையிலான அனைத்து விடயங்களிலும் தங்களது விஷேட கவனத்தினைச் செலுத்துவதுடன், அதில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விண்ணப்பித்தல் வேண்டும். 10.0 இல் மற்றும் 10.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளுக்கு மாத்திரம் உரியதான நிழற் பிரதிகளை இணைத்து அனுப்பும் போது பாடசாலை விண்ணப்பதாரர்கள் அதிபரின் மூலமும் தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் சமாதான நீதவான் ஒருவரின் மூலமாகவும் இரண்டு நிழற் பிரதிகளை உறுதிப்படுத்தி இருக்க வேண்டும்.

2.0 **கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய (Legal) F5 அளவிலான (சென்டி மீற்றர் 21.8 X சென்டி மீற்றர் 34) வெள்ளைக் கடதாசியில் விண்ணப்பப்படிவத்தினைத் தயாரிக்கவும்.** கூட்டினுள் சரியான தெரிவுகளைக் காட்டப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் உரிய கூட்டினுள் "X" அடையாளம் இடவும்.

3.0 விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப்படுவதற்காக ஒவ்வொரு பாடநெறிகளுக்காகவும் கல்வி அமைச்சினால் தயாரிக்கப்படும் கணினி மயப்படுத்தப்பட்ட பெயர்ப்பட்டியல் (கணினி பெயர்ப்பட்டியல்) தயாரிக்கப்படுவது 1.0 – 9.8 வரையிலான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு என்பதை தயவுசெய்து கருத்திற் கொள்ளவும். விஷேடமாக பாடநெறியின் இலக்கம், பாடநெறியின் பெயர், **6.2.1 பந்தியில் குறிப்பிடப்பட்டதற்கு இணங்க நிரந்தர வதிவிட மாவட்டம்,** க.பொ.த. (உ.த.) பரீட்சை இலக்கம், Z புள்ளி (Z-Score) போன்றன சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளவும். இலக்கங்களை ஒன்றின் மேல் ஒன்று எழுதுதல் அல்லது தெளிவற்ற விதத்தில் எழுதுதல் அல்லது தவறாக எழுதுதல் போன்றவற்றினால் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதை தயவுசெய்து கருத்திற் கொள்ளவும்.

4.0 உடற்கல்விப் பாடநெறிக்கான விண்ணப்பப்படிவத்தின் 12.0 பந்தியிலும், புத்த சமயப் பாடநெறிக்கான விண்ணப்பப்படிவத்தின் 13.0 பந்தியிலும், கத்தோலிக்கம் / கிறிஸ்தவ சமயப்பாடநெறிக்கான விண்ணப்பப்படிவத்தின் 14.0 பந்தியிலும், இந்து சமயம் / இஸ்லாம் சமயப்பாடநெறிக்கான விண்ணப்பப்படிவத்தின் 15.0 பந்தியிலும், மேற்கத்தேய சங்கீதப்பாடநெறிக்கான விண்ணப்பப்படிவத்தின் 16.0 பந்தியிலும் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களைக் கவனத்திற்குக் கொண்டு செல்வதுடன், அவற்றினை சரியான விதத்தில் நிரப்புதல் வேண்டும். அத் தகவல்கள் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.0 வர்த்தமானி அறிவித்தலில் 6.2 –"நிரந்தர வதிவிடத்தினைத் தீர்மானித்தல்" இன் கீழ் **6.2.1 பந்திக்கு** உரியவாறு மாவட்டங்களுக்கு உரிய இலக்கம் இவ்வாறாகும்..

(விண்ணப்பப்படிவத்தின் 4.0 பந்தியினைப் பூர்த்தி செய்வதற்காக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும்.)

| மாவட்டம் | உரிய இலக்கம் | மாவட்டம் | உரிய இலக்கம் |
|---|---|---|---|
| கொழும்பு | 1 | முல்லைத்தீவு | 14 |
| கம்பஹா | 2 | மட்டக்களப்பு | 15 |
| களுத்துறை | 3 | அம்பாறை | 16 |
| கண்டி | 4 | திருகோணமலை | 17 |
| மாத்தளை | 5 | குருநாகல் | 18 |
| நுவரெலியா | 6 | புத்தளம் | 19 |
| காலி | 7 | அநுராதபுரம் | 20 |
| மாத்தறை | 8 | பொலன்னறுவை | 21 |
| அம்பாந்தோட்டை | 9 | பதுளை | 22 |
| யாழ்ப்பாணம் | 10 | மொனராகலை | 23 |
| கிளிநொச்சி | 11 | இரத்தினபுரி | 24 |
| மன்னார் | 12 | கேகாலை | 25 |

6.0 மொழிமூலத்திற்கான உரிய குறியீட்டு அட்டவணை

சிங்களம் - S தமிழ் - T ஆங்கிலம் - E

7.0 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் க.பொ.த (உ./த.) பெறுபேற்று அடிப்படையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாவட்ட அடிப்படையில் பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளல் - 2018

7.1 2016 ஆம் ஆண்டின் க.பொ.த (உ/த) பெறுபேற்றின்படி மாவட்ட அடிப்படையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு உள்வாங்கப்படும் பயிலுநர்களின் எண்ணிக்கை

7.1.1 சிங்கள மொழிமூலம்

| மாகாணம் | பாடநெறி / மாவட்டம் | ஆரம்பக்கல்வி | விஞ்ஞானம் | கணிதம் | சமூக விஞ்ஞானம் | பௌத்த சமயம் | கத்தோலிக்கம்/ கிறிஸ்தவம் | முதலாம் மொழி (சிங்களம்) | சித்திரம் | நடனம் (கீழைத்தேயம்) | சங்கீதம் (கீழைத்தேயம்) | நாடகமும் அரங்கியலும் | உடற்கல்வி | மனைப் பொருளியல் | விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் | தொழில்நுட்பக் கல்வி - கலையும் கைப்பணியும் | வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும்: வடிவமைப்பும் கட்டிடத் தொழில்நுட்பமும் | வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பமும் | வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில்நுட்பமும் | இரண்டாம் மொழி (சிங்களம்) | விசேட கல்வி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேல் | கொழும்பு | 73 | 7 | 6 | 2 | 9 | 1 | 5 | 2 | 2 | 1 | 2 | 11 | 2 | 2 | 1 | 1 | 0 | 1 | 5 | 7 |
| | கம்பஹா | 72 | 6 | 5 | 1 | 7 | 2 | 6 | 2 | 1 | 2 | 1 | 10 | 2 | 2 | 1 | 0 | 1 | 1 | 5 | 7 |
| | களுத்துறை | 43 | 6 | 6 | 1 | 9 | 1 | 4 | 2 | 1 | 1 | 1 | 11 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 5 | 4 |
| மத்திய | கண்டி | 45 | 8 | 5 | 2 | 11 | 2 | 6 | 2 | 1 | 2 | 1 | 9 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 4 | 6 |
| | மாத்தளை | 35 | 5 | 3 | 1 | 5 | 1 | 2 | 1 | 1 | 1 | 2 | 6 | 2 | 2 | 1 | 1 | 1 | 0 | 5 | 3 |
| | நுவரெலியா | 27 | 4 | 4 | 1 | 5 | 1 | 3 | 1 | 1 | 1 | 1 | 6 | 2 | 2 | 0 | 0 | 1 | 0 | 5 | 2 |
| தென் | காலி | 54 | 8 | 7 | 1 | 9 | 1 | 5 | 2 | 2 | 1 | 1 | 9 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 6 | 5 |
| | அம்பாந்தோட்டை | 55 | 7 | 5 | 1 | 8 | 1 | 4 | 2 | 1 | 1 | 1 | 8 | 2 | 2 | 1 | 1 | 1 | 0 | 6 | 4 |
| | மாத்தறை | 46 | 6 | 5 | 2 | 8 | 1 | 4 | 2 | 1 | 2 | 2 | 10 | 2 | 2 | 1 | 1 | 0 | 1 | 5 | 5 |
| வட | யாழ்ப்பாணம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | கிளிநொச்சி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | மன்னார் | 5 | 0 | 1 | 1 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 | 0 |
| | முல்லைத்தீவு | 9 | 2 | 1 | 1 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 | 0 |
| | வவுனியா | 12 | 2 | 2 | 1 | 2 | 0 | 2 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 2 | 0 | 0 | 0 | 1 | 2 | 1 |
| கிழக்கு | அம்பாறை | 36 | 11 | 10 | 2 | 4 | 0 | 2 | 2 | 1 | 1 | 1 | 6 | 2 | 2 | 0 | 1 | 1 | 0 | 4 | 4 |
| | மட்டக்களப்பு | 6 | 0 | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 | 0 |
| | திருகோணமலை | 18 | 7 | 3 | 1 | 3 | 0 | 2 | 1 | 1 | 1 | 1 | 3 | 2 | 2 | 0 | 0 | 1 | 1 | 4 | 3 |
| வடமேல் | குருநாகல் | 78 | 10 | 12 | 2 | 8 | 1 | 8 | 2 | 2 | 2 | 1 | 11 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 4 | 6 |
| | புத்தளம் | 57 | 10 | 10 | 1 | 4 | 2 | 5 | 1 | 1 | 1 | 1 | 10 | 2 | 2 | 0 | 1 | 0 | 1 | 4 | 4 |
| வடமத்திய | அநுராதபுரம் | 67 | 6 | 11 | 2 | 8 | 1 | 4 | 2 | 1 | 1 | 2 | 10 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 4 | 4 |
| | பொலன்னறுவை | 41 | 7 | 8 | 1 | 6 | 1 | 3 | 2 | 1 | 1 | 1 | 7 | 2 | 2 | 1 | 1 | 1 | 0 | 4 | 3 |
| ஊவா | பதுளை | 52 | 8 | 8 | 2 | 10 | 1 | 3 | 2 | 1 | 1 | 2 | 9 | 2 | 2 | 1 | 1 | 0 | 1 | 4 | 3 |
| | மொனராகலை | 48 | 10 | 10 | 1 | 6 | 1 | 4 | 2 | 1 | 1 | 1 | 10 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 4 | 2 |
| சப்பிரகமுவ | கேகாலை | 49 | 8 | 8 | 1 | 8 | 1 | 5 | 2 | 2 | 1 | 1 | 9 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 5 | 3 |
| | இரத்தினபுரி | 72 | 12 | 9 | 2 | 8 | 1 | 5 | 2 | 1 | 2 | 1 | 10 | 2 | 2 | 1 | 0 | 1 | 1 | 4 | 4 |
| **மொத்தம்** | | **1000** | **150** | **140** | **30** | **140** | **20** | **85** | **35** | **25** | **25** | **25** | **170** | **40** | **40** | **15** | **15** | **15** | **15** | **95** | **80** |
| **மொத்த எண்ணிக்கை** | | **2160** | | | | | | | | | | | | | | | | | | | |

7.0 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் க.பொ.த (உ./த.) பெறுபேற்று அடிப்படையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாவட்ட அடிப்படையில் பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளல் - 2018

7.1 2016 ஆம் ஆண்டின் க.பொ.த (உ./த.) பெறுபேற்றின்படி மாவட்ட அடிப்படையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு உள்வாங்கப்படும் பயிலுநர்களின் எண்ணிக்கை

7.1.2 தமிழ் மொழிமூலம்

